"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

தை - மாசி - பங்குனி 2017

**25ஆம் ஆண்டில் கலசம் கால் பதிக்கிறது.**

*Kalasam is entering into it's 25th year.*

## கலசம் வாசகர்களுக்கு
## பொங்கல் புதுவருட வாழ்த்துக்கள்.



ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

பெருமையுடன் 21 வது வருடத்தில்

# RUBY'S
CATERING

**020 8799 7180**

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
| --- | --- | --- |
|  |  |  |

**திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா**
**கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்**
**அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா**





## ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton THISTLE HOTEL Holiday Inn

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180
mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 25

# கலசம்
# KALASAM

ஒலி 84

www.saivamunnettasangam.com

FREE ISSUE

கலசம்
நிருவாகக் குழு

ஆசிரியர்
க ஜெகதீஸ்வரன்

உதவி ஆசிரியர்கள்
வை சிவனருட்செல்வர்
சி அற்புதானந்தன்

விநியோகம்
சோ நிரஞ்சன்

விளம்பரம்
தொடர்புகள்
மா இந்துசேகரன்

நிருவாகம்
வ இ இராமநாதன்

வெளியீடு
சைவ முன்னேற்றச்
சங்கம்

முகவரி
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

மின்னஞ்சல்
email:
smsukkalasam@gmail.com

## நன்றே செய்வோம்

சென்ற 2016ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் சைவமுன்னேற்றச் சங்கம் (ஐ.இ) நாற்பதாவது வருடத்தில் காலடி எடுத்து வைத்தது. உங்கள் கைகளிலே தவழும் இந்தக் கலச இதழும் இந்த வருடம் இருபத்தைந்தாவது வருடத்தில் கால்பதிக்கின்றது. வாசகர்களாகிய உங்களின் விமரிசனங்கள், ஆலோசனைகள் ஆகியவைதான் இத்தனை ஆண்டுகளாக இந்த இதழ் சிறப்பான முறையில் வெளிவருவதற்கு எம்மை ஊக்குவித்து வந்திருக்கின்றன. அத்துடன் வர்த்தக நிலையங்கள் தரும் விளம்பரங்கள் இந்த இதழைத் தொடர்ந்து பிரசுரிப்பதற்கும் இலவசமாக விநியோகிப்பதற்கும் வழிசமைக்கின்றன. இடையிடை சில கலசஇதழ்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் வெளிவராவிட்டாலும் கூடுமானவரை பிரசுரிக்க நாம் முயன்றுள்ளோம். வாசகர்களாகிய உங்களுக்கும் வர்த்தநிலைய உரிமையாளர்களுக்கும் எமது நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தொடர்ந்தும் உங்கள் ஆதரவை நாடிநிற்கின்றோம்.

சைவமுன்னேற்றச் சங்கம் நாற்பதாவது ஆண்டை அடைந்தமையைக் கருத்தில் இருத்திச் சங்கத்தின் செயற்குழுவினர் ஒரு தீர்மானம் எடுத்துள்ளார்கள். பொருளாதாரத் தட்டுப்பாட்டால் திருமணம் தடைபட்டுள்ள நாற்பது குடும்பங்களில் உள்ளவர்களுக்குத் திருமணம் செய்து வைப்பதுதான் அவர்களின் திட்டம். ஒரு திருமணத்துக்கும், பின்னர் தம்பதியர் தம்முடைய வாழ்க்கையை ஆரம்பிப்பதற்குமாக வரும் ஒரு தொகையை அவர்களுக்கு வழங்கி, திருமணம் செய்துவைப்பதே சைவமுன்னேற்றச் சங்கத்தின் நோக்கம். இந்தப் புனிதமான பணிக்கு உதவ விரும்பும் அன்பர்கள் சைவமுன்னேற்றச் சங்கத்தினருடன் தொடர்பு கொள்ளலாம்.

இந்தப் பணி தொடர்பான அனைத்து விவரங்களும் இந்த இதழின் இருபதாவது பக்கத்தில் பிரசுரமாகியிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் கலசம் நிருவாகக் குழுவினரின் சார்பில் வாசகர் அனைவருக்கும் பொங்கல், புதுவருட வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

க ஜெகதீஸ்வரன் ஆசிரியர்

# இந்த இதழில்


குஞ்சிதபாதம் 03

சைவசித்தாந்தம் - ஓர் அறிமுகம் 05

தமிழ், சைவப் பாரம்பரியத்தின் தலைமகன் 07

ஏயர்கோன் கலிக்காம நாயனார் 13

ஜோதி லிங்கங்கள் 17

ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி விசேட தினங்கள் 29

முந்திவந்த காதைப் பிந்திவந்த கொம்பு மறைத்ததா? 18

Hinduism in search of answers 35

'பசுவுக்கொரு வாயுறை' 30

மஹாராஷ்டிரம் பயணக்கட்டுரை - வைத்தியநாதம் கோயில் 32

தெய்வீகக் காதல் 38

கண்ணனும் தாத்தாவும் 40

Thirukural stories 47


**அட்டைப்படம்: கூகிள் மின்னம்பலம்**

# குஞ்சிதபாதம்

“இடது பாதம் தூக்கி ஆடும்” என்றொரு கமாஸ் இராகப் பாடலை நாம் இசைக் கச்சேரிகளிலே கேட்டிருக்கிறோம். தில்லையிலே ஆடும் நடராசப் பெருமானின் நடன அழகை வருணிக்கும் பாடல் அது. “தூக்கிய திருவடி துணையென நம்பினேன்” என்று இன்னொரு பாடல் சங்கராபரண இராகத்தில் அமைந்தது. இதுவும் தில்லைப் பெருமானின் தூக்கிய திருவடியின் பெருமையையே பேசுகிறது. “காலைத் தூக்கிநின்று ஆடும் தெய்வமே” என்பதும் தூக்கிய திருவடியைப் பாடும் யதுகுலகாம்போஜி இராகப் பாடல். இந்தப் பாடல்கள் பாராட்டும் தூக்கிய திருவடியைக் ‘குஞ்சிதபாதம்’ என்று சொல்வர். பத்தர்களுக்கு அருள் செய்யும் திருவடி அது. சிவனின் ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவற்றை விளக்குவது நடராசர் திருவுருவம். அதிலே அருளலைக் குறிப்பது இந்தத் தூக்கிய திருவடி. இதை உண்மை விளக்கம் என்ற நூலில் வரும் ‘தோற்றம் துடியதனில்’ என்ற பாடல் இயம்புகின்றது.

பெரியபுராணத்திலே காரைக்கால் அம்மையார் புராணம் பாடவந்த சேக்கிழார் அம்மையாரின் விருப்பத்தை ஒரு பாடல்மூலம் வெளிப்படுத்துகிறார். அந்தப் பாடல்:

**இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்**
**பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை யென்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி**
**அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்**

பெரியபுராணம்: காரைக்கால் அம்மையார் புராணம் 60

பிறவாமை வேண்டுகின்ற அம்மையார் தற்செயலாக மீண்டும் பிறக்கவேண்டி வந்துவிட்டால் ‘உன்னை மறவாமை வேண்டும்’ என்று கேட்டுவிட்டு, நிறைவாக, ‘நீ ஆடும்போது உன் அடியின்கீழ்’ இருக்கவேண்டும் என்று கேட்கிறார். இந்தப் புராணப் பாடலும், பத்தர்களுக்கு அருளும் தில்லைப் பெருமானின் திருவடிப் பெருமையைக் காரைக்கால் அம்மையார் வரலாறுமூலம் பேசுகிறது.

பல தலங்களையும் தரிசித்த திருநாவுக்கரசு சுவாமிகள் தில்லைக்கு வருகிறார். மேற்குக் கோபுர வாயில் வழியாக உள்ளே நுழைந்து சிற்றம்பலவனின் பொற்சபைக்கு வந்து வணங்குகிறார். வணங்கும்போது தான் வந்த காரணத்தையும் விளம்புகிறார். ஒருவரை நாம் பார்க்கப்போனால் ஏன் பார்க்கப்போனோம் என்று காரணம் சொல்வது மரபல்லவா? அந்த மரபு வழியில் ‘அத்தா உன் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே’ என்கிறார். அதற்கு முன்னர், தன்னை அறிமுகம் செய்கிறார். ‘இறைவா! நீ மலபந்தங்கள் அற்றவன். நம் எல்லோருக்கும் முதல்வன். நீ ஒரு யோகி. உன்னை நான் ஒரு பத்தனாகப் பாடமாட்டேன். ஏனென்றால் எனக்குப் பத்தி செய்வது எப்படியென்று தெரியாது. அப்படி இருக்கும்போது எப்படி நான் பத்தி செய்வேன். அதற்காக என்னை நீ இகழ்ந்துவிடாதே. உன் ஆடலைக் காண்பதற்காகவே நான் வந்தேன்’ என்கிறார். அந்தத் தேவாரம்:

**பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ**
**எத்தினாற் பத்தி செய்கேன் என்னைநீ இகழவேண்டா**
**முத்தனே முதல்வா தில்லை அம்பலத் தாடுகின்ற**
**அத்தாவுன் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே**

திரு4 பதி 23 பா1

தொடர்ந்து அங்கே தங்கியிருந்து மேலும் பல தேவாரங்களை அப்பர்சுவாமிகள் அருளினார்கள். தில்லைப் பெருமானின் நடன அழகில் மயங்கிய அவர், மனிதப் பிறவிப்பயனை அங்கு தாம் அடைந்துவிட்டதாகக் களிக்கிறார். நடராசரின் அழகில் அவர் முழுவதுமாக இலயித்துவிட்டு அருளிய தேவாரம்:

**குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண் ணீறும்**
**இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே**

திரு 4 பதி 81 பா 4

வளைந்த புருவங்களையும், சிவந்த வாயிலே புன்னகையையும், கங்கையால் நனைந்த சடா முடியையும், பவளம்போலச் சிவந்த திருமேனியில் பால்போன்ற வெண்மையான திருநீற்றையும், நடமாடும்போது தூக்கிய திருவடியையும் பார்க்கும்போது, அந்த அழகில் மயங்குவற்கு எனக்குக் கிடைத்த பாக்கியம் என்னே? அப்படிக் கிடைப்பதானால் மனிதப் பிறவியையும், அது எத்தனை துன்பங்கள் தந்தாலும், அதை ஏற்கலாம். அது நமக்கு வேண்டுவதே என்கிறார் அப்பரடிகள்.

கோயில் என்றால் அது சிதம்பரந்தான். அங்கே நடமாடும் சிற்றம்பலவன் அழகைக் காண மணிவாசகர், ஞானசம்பந்தர், சுந்தரர், அப்பர், திருநாளைப்போவார், திருமூலர் என்று ஒரு பெரிய அருளாளர் வரிசையே நின்றது. தில்லைப் பெருமானுடைய தூக்கிய திருவடியை ஒரு முறையாவது தரிக்கவேண்டும் என்று சென்றவர்கள்தான் இந்த அருளாளர்கள்.

சைவராகப் பிறந்த நாம், நம் வாழ்வில் ஒருமுறையாவது அந்த வரிசையில் நிற்கவேண்டும் நிற்க முயலவேண்டும். தூக்கிய திருவடியை ஒருமுறையாவது பார்க்கவேண்டும். பார்த்தால் மட்டுமே அந்த அநுபவத்தில் மூழ்க இயலும். மூழ்கும்போது வரும் இன்பத்தை வார்த்தைகளில் வடிக்க இயலாது. அது தூக்கிய திருவடி, '**குஞ்சிதபாதம்**'.

நன்றி: தகவல்

## நடராஜர் அபிஷேகங்கள்

**சித்திரையில் ஓணம் முதலானி உத்திரமாம்**
**சத்துதனு ஆதிரையும் சார்வாகும் - பத்திவளர்**
**மாசிஅரி கன்னி மருவுசதுர்த் தசிமன்று**
**ஈசரபி சேகதின மாம்**

சித்திரை : திருவோணம் - **மாலை** நேரம், ஆனி : உத்தரம் - **அதிகாலை** தனு : மார்கழி : திருவாதிரை - **அதிகாலை**, மாசி : சதுர்த்தசி அல்லது பௌர்ணமியுடன் மகம் கூடிவரும் நாள் - **மாலை**, அரி : சிங்கம் - ஆவணி : சதுர்த்தசியும் அவிட்டமும் கூடிவரும் நாள் - **மாலை**, கன்னி : புரட்டாசி : சதுர்த்தசி - **மாலை** ஆக நடராஜர் அபிடேகம் வருடத்தில் 6

இதில் சித்திரை, ஆனி, மார்கழி மூன்றும் நட்சத்திர முக்கியமானவை, மாசி, ஆவணி, இரண்டும் நட்சத்திரத்தோடு சதுர்த்தசி திதியை அண்டி வருபவை, புரட்டாசி திதி மட்டும் அண்டி வருவது.

# சைவசித்தாந்தம் - ஓர் அறிமுகம்

- திருமதி சொர்ணமலர் முருகையா -

சைவசித்தாந்தம் மெய்ப்பொருள் கொள்கை. முழுமை அறிவும் அநுபவ அறிவும் உறுதி செய்ததைச் சைவசித்தாந்தக் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அறிவின் முழுமையில் வெளிப்பட்டதும் அநுபவத்தின் பேரில் உறுதிசெய்யப்பட்ட கொள்கையாக சைவசித்தாந்தக் கொள்கை சுட்டிக்காட்டப் பெறுகிறது.

நந்தியெம்பெருமானுக்கு அவரின் சந்தேகங்களைத் தீர்ப்பதற்காகக் கைலையில் சிவ பெருமானால் உரைக்கப்பெற்று, அதன்பின் வழிவழியாக சனற்குமாரர், சத்தியஞான தரிசினிகன், பரஞ்சோதிமுனிவர் என்பவர்களின் வழியாக வந்து பின்னர், பரஞ்சோதிமுனிவரால் மெய்கண்டாருக்கு உரைக்கப்பெற்றது. இது முழமை அறிவால் நிலைநிறுத்தப்பட்ட ஒன்றாகும்.

அடுத்து இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் தொன்றுதொட்டு வந்த தமிழ் மரபு. பதினெண்மேல்கணக்கு எனப்பெறும் வாழ்விலக்கிய நூல்களுக்கு அமைந்த இலக்கண நூல்கள் பதினெண்கீழ்கணக்கு எனப்படும். இம்முறையின் கொள்கை ஏற்பு அன்றி அறிவியல் தரத்தையும் கொண்டதாக அமைந்து வாழ்வியல் விளக்கமும் அதன் அநுபவ மெய்யுமாகப் பன்னிரு திருமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவைகளின் வழி மெய்கண்ட சாஸ்திரங்கள் கொள்கை வெளியீட்டை உறுதிபெற நிறுத்துவதாகும்.

இலக்கியவகை நூல்களாலும், தோத்திர நூல்களாலும், சாத்திர நூல்களாலும் அறியப்பெறும் மெய்ப்பொருளியல் கருத்துக்கள் மெய்கண்டாரின் சிவஞானபோத வழி சிவஞானமுனிவரின் சிவஞான மாபாடியம் வழியாகவும் சைவ சித்தாந்தத்தில் மையப்படுத்தப் பட்டிருக்கின்றன. இக்கட்டுரை சைவ சித்தாந்தத் தத்துவங்கள் நிலை நிறுத்தப்பெற்ற முறைமையை ஆராய்கிறது.

காண்டல் அளவை, கருதல் அளவை, நூல் அளவை என மூவகை அளவைகளில் பல வாறாகக் கூறப்படும் அளவைகளையும் இணைத்துப் பொது விளக்கத்தைச் சைவசித்தாந்தம் கூறுகிறது.

காண்டல் அளவை, பிரதியட்சப் பிரமாணம் என்று பலவாறாகக் கூறப்படும். காண்டல் அளவை பார்க்கப்படுதல் என்ற நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. அவ்வகையில் கண், மனம், ஆன்மா சார்பு முதலியவைகளால் பார்க்கப்படுதலும், பெறுதலுமாகி நிகழ்ச்சியை அடிப்படையாயகக் கொண்டதாக அமையும். பொதுவாக காணப்படும் காட்சியானது வேறுபாடின்றி அறிவு என்பதாக துணியப்படுவதற்கு ஐயம், திரிபு என்ற இரண்டு நிலைகளில் கொண்டு பேசப்படும். காணப்பட்ட பொருட்கள் இதுவோ அதுவோ என இரண்டுமாகப்படில் ஐயக்காட்சி, எனவும் காணப்பட்ட பொருளோடு தொர்புடையனவாக இணைத்துப் பார்க்கப்படில் திரிவுக்காட்சி எனவும் விளக்கப்படும்.

நூல் அளவை, சப்தப்பிரமாணம், ஆப்தவாக்கியம் எனவும் குறிக்கப்படும். மனிதராலும், இறைவனாலும் உயர்நோக்கிலும் உயிர் அநுபவ நோக்கில் கருதப்பட்டு ஏற்றுக்கொண்டு இவை தந்திரம், மந்திரம், உபதேசம் என மூன்றாலும் கூறப்படும்.

அவன், அவள், அது என்ற மூன்றும் கண்களாலே காணக்கூடியது. பார்க்கப்படுகின்ற உலகம், பார்க்கப்படும் தன்மை, உலகப்பொருள்களின் தன்மை நோக்கம் என விரிந்து, உலகியலை நோக்கி முடிவுகளை விளக்குகிறது. அவன், அவள், அது என்னும் காணப்படுகின்ற பொருள் யாவும் அந்த மூன்று பகுப்புகளில் இன்னது இன்னது எனச் சுட்டி அறியப்படுகின்றது. உள்ளது என்று பார்க்கப்படுகின்ற பொருள் யாவும்

தோற்றுவிக்கப்படும் பொருளாயும் அழியும் பொருளாயும் இருக்கின்றன. மக்களில் பார்க்கப்படுவோரும் அஃறிணையில் பார்க்கப்படுவனவும் கண்முன்னே தோன்றி அழிவனவாய் இருக்கின்றன. அவ்வாறே காணப்படும் பொருள்கள் இருக்கின்ற என்று பார்க்கப்பட்டாலும் பார்க்கப்பட்டதே தோன்றுவது என்றும் அழிவது என்பதும் உணர்த்தப்படுகின்றது.

உள்ளது தோன்றும், இல்லாதது தோன்றாது என்ற உண்மையின் அடிப்படையில் இருப்பதனாலே தோற்றம் இறுதி இரண்டும் மெய்ம்மை பெறுகின்றன. அவன், அவள், அது என்ற மூன்றும் தோற்றமும் இறுதியும் உடையனவாகும். இதனைக் காட்சியளவை மூலமும் கருத்தளவை மூலமும் உலகப்பொருள்களின் முழமைக்குமாக முடிவாக சைவசித்தாந்தம் உலக நோக்கினாலேயே விளக்க முற்படுகின்றது. இதனை மெய்கண்டார் சிவஞானபோதத்தின் முதற்சூத்திரமாகச் சொல்லுகிறார்.

**'அவன் அவள் அது மூவினைமையில் தோற்றிய திதியே ஒடுங்கு மலத்து உளதாம் அந்தமும் ஆதியும் என்பனார் புலவர்'.**

அவன், அவள், அது என சுட்டிக் காட்டப்படுகின்ற உலகம் தோன்றல், இருத்தல், மறைதல் என்ற மூன்று தொழில்களையும் கொண்டமையால் ஒருவனால் தோற்று விக்கப்பட்ட உள்பொருளேயாகும். இவ்வுலகம் கன்மமலத்தினால்தான் ஒடுங்குமிடமாகிய கடவுளிடத்தினின்று ஆணவ மலத்தினால் மீண்டும் தோன்றும். இம்மூன்று தொழிலையும் செய்வதற்கு ஒருவன் வேண்டும். அவனே இறைவன் என்று காணப்படும். இதை உலகத்தின் மூலம் காணமுடியாத இறைவனைக் காட்டுகிறது. இச்சூத்திரம் அவ்வாறு காட்டும்பொழுது இறைவன் யார் என்றால் யார் ஒருவன் ஒரு பொருளை அழிக்கின்றானோ அவனே தோற்றுவிக்கவும் முடியும் என்ற அடிப்படையில் சம்காரக் கடவுளாகி சிவபெருமான்தான் முழுமுதற்கடவுள் என்று குறிப்பிடப்படுகிறது.

தோற்றுவிக்கப்படுவன காரியப்பொருள் எனவும்(தூலப்பொருள்) தோற்றுவிக்கப் படுவதற்கான அடிப்படைப்பொருள் காரணப்பொருள் (சூக்குமப்பொருள்) எனவும் கூறப்படும். காரணத்தோடு இயல்புடையதாகவே காரியம் பிறக்கிறது என்றும் கூறி காரியம் வெளிப்படுத்துதல் நிமித்த காரணமாய் ஆற்றப்படுகிறது என்றும் சைவசித்தாந்தம் கூறுகிறது.

தோற்றம் எவன் காரணமாக நிகழ்ந்ததோ அவன் நிமித்தகாரணன் என்றும், தோற்றத்திற்குரிய பொருள் முதற்காரண மென்றும் தோற்றம் நிகழ்த்த உடன்நின்றது துணைக்காரணம் என்றும் சொல்லப்படுகின்றது.. ஒரு குடம் செய்வதற்கு மண், சக்கரம், குயவன் ஆகிய மூன்றும் தேவை. மண் முதற்காரணமாக அமைய, சக்கரம் துணைக்காரணமாக அமைய, குயவன் நிமித்த காரணமாக இருந்து குடத்தை உருவாக்குகிறான். குடம் அநுபவிக்கும் பொருளாக இல்லாது அநுபவிக்கப்படும் பொருளாக இருக்கிறது. குடம் அநுபவிப்பவனுக்காகச் செய்யப்பட்டது. அநுபவிப்பவன் குடத்துக்கும் குயவனுக்கும் வேறாகிறான்

மேற்சொன்ன உதாரண அமைப்பில் மாயை முதற்காரணமாக அமைய, இறைவன் நிமித்த காரணமாக தன் ஆற்றல் துணைக்காரணமாக அமைய காரியப்பொருள் தோற்றம், இருப்பு, அழிவு என்னும் முத்தொழில் உடையவனாக படைத்தல், காத்தல், அழித்தல் செய்கிறான் என்று ெல்லப்படுகிறது. ஆன்மா அறிவுடைய பொருளாக வாழ்வதற்காகவே நிகழ்த்தப் படுகிறது. அநுபவிக்கப்படும் பொருள் காரியமாக்கப்படுவன.

**கோயிற் பிரசாதம் எப்படி உண்ணவேண்டும்?**

**கோயிலில் இலவசமாகப் பிரசாதம் கிடைக்கிறதே என்று அளவுக்கு அதிகமாக வாங்கிச் சாப்பிடக்கூடாது. பக்தியுடன் சிறு அளவை ஓர் இலையில் வாங்கிச் சிந்தாமல் உண்ணவேண்டும். பிரசாதத்தைக் குப்பைத் தொட்டியிலே வீசுவது மகா பாவம்.**

# தமிழ் சைவப் பாரம்பரியத்தின் தலைமகன்

## மு க மாசிலாமணி B.A (Cey)

கி பி ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுகளில் சமணம், பௌத்தம், குறிப்பாகச் சமணமத ஆக்கிரமிப்புக்களுள் அமிழ்ந்து சைவமும் அதுசார்ந்த கோயில் வழிபாடு போன்ற பண்பாட்டுப் பாரம்பரியங்களும் சிதைந்து சீரழிந்தன. அந்த இருள் படர்ந்த சூழலில் சமய குரவர்கள், குறிப்பாக சம்பந்தரும் நாவுக்கரசரும் அவதரித்துப் பண்ணிசைத் தமிழாலும் அதீத ஆற்றல்களாலும் சைவத்தையும் அதுசார்ந்த பண்பாட்டுக் கூறுகளையும் மீட்டு வளர்த்து நிலைநிறுத்திச் சைவம் தமிழ் வரலாற்றில் மறுமலர்ச்சி ஒன்றினைத் தோற்றுவித்தனர்.

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இலங்கையில் கிறித்துவ மதத்தினைப் பரப்புவதற்குக் கிறித்துவ மிசனரி மார்கள் தீவிரமான பிரசாரங்களை மேற்கொண்டனர். ஆங்கிலேயர் அறிமுகப் படுத்திய கல்விமுறை, குறிப்பாக, கட்டட, தளபாட வசதிகளுடனான பாடசாலைகள், பாடநூல்கள் ஆங்கிலமொழி மூலம் கல்வி போன்ற நவீன கல்வி வசதிகள் கல்வியில் பெரிதும் பின்தங்கியிருந்த தமிழ்மக்களை வெகுவாகக் கவர்ந்தன. அதனால் ஆங்கிலக் கல்விமூலமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்களை, வளங்களை இறுக்கமாகக் கைப்பற்ற அவர்கள் உந்தப்பட்டனர்.

கிறித்துவமும் அதுசார்ந்த மேற்குநாட்டுப் பண்பாடும் வேகமாகக் காலூன்றிப்பரவ ஈழத்தமிழினம் தம் சமயம் மொழி பண்பாட்டுப் பாரம்பரியங்கள் அனைத்தையும் புறந்தள்ளி அந்நியமயப்பட்ட செல்வாக்கிற்குள் சிக்கித் தத்தளித்த இருள் கௌவிக்கொண்ட ஓர் அசாதாரண சூழ்நிலையில், முன்பு அப்பரும் சம்பந்தரும் சமணத்தால் சீரழிந்த பண்பாடுகளை மீட்டதுபோல, அவர்களுக்கு ஏறக்குறைய ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்குப் பின்னர் உதயசூரியனென யாழ்ப்பாணம் நல்லூரில் 1822இல் தோன்றிவர்தான் நாவலர்.

இளமையில், திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஆழ்ந்து கற்றவர். தொடர்ந்து கற்பதற்குச் சைவச்சூழலில் அமைந்த பாடசாலைகள் இன்மையால் பிரித்தானிய வெஸ்லியன் மிஷன் (Wesleyan mission) நடத்திய ஆங்கிலப் பாடசாலையில் - இன்றைய யாழ் மத்திய கல்லூரி - சேர்ந்து அங்கே கற்றும் பின்னர் கற்பித்தும் 14 ஆண்டுகளைக் கிறித்துவச் சூழலிலேயே கழித்தார். அப்போது அதிபர் பேர்சிவல் பாதிரியாருக்குத் (Fr Percival) தமிழ்ப் பண்டிதராகவும் கிறித்துவ வேதாகமநூலான விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்த்தும் சேவையாற்றினார். இக்காலத்தில் மிசனரி மார்கள் கிறித்துவ சமயத்தைத் தமிழ் மக்களிடையே பரப்ப மேற்கொண்ட நடவடிக்கைகளான பிரசங்கம் செய்தல், சமய வினாவிடை நூல்களைப் பிரசுரித்தல், உரைநடை நூல்கள் எழுதுதுல், கிறித்துவமே உயர்ந்த மதமெனச் சைவத்தைத் தாக்கிக் கண்டன நூல்கள் பிரசுரித்தல், கிறித்துவ சமயக் கருத்துக்களைத் தாம் கற்பிக்கும் பாடநூல்கள் ஊடாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் பரப்புதல், இன்னும் பல்வேறு வழிகளில் கிறித்துவமதப் பிரசாரத்தை முன்னெடுக்கக் கல்வியை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். இவ்வாறு அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தையும் உள் வாங்கிக்கொண்டு கிறித்துவர்களின் தீவிரமான பிரசாரப்பிடியிலிருந்து சைவத்தையும் சைவ சமூகத்தையும் மீட்டுப் பாதுகாக்கவேண்டும் என்ற உயிர்மூச்சாகக் கொண்டிருந்த தம் இலக்கினைச் சற்றும் வெளிப்படுத்தாமல் மிசனரியை விட்டு வெளியேறிய நாவலர், மேற்குறித்த செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் சைவத்தையும் அது சார்ந்த பண்பாட்டுப்

பாரம்பரியங்களையும் மீட்டுப் பாதுகாத்து வளர்க்க முழுவீச்சுடன் முழுமையாகப் பயன்படுத்தினார். சுமார் 14 ஆண்டுக் கிறித்துவ சூழல்தான் அறிவின் பெருக்கமும், அஞ்சா நெஞ்சமும், துணிவும், செயலாற்றும் திறனும் கொண்ட நாவலர் என்ற வரலாற்று நாயகன் ஒருவரை உருவாக்கி ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனம் ஒன்றுடன் தனிமனிதனாக நின்று போராடித் தன் மக்களின் சமயத்தை - மொழியை - பண்பாட்டை - சுயகௌரவத்தை மீட்டு நிலைநிறுத்துவதற்கு எனச் சைவத்தமிழ் உலகிற்கு வழங்கியது. "கிறித்துவச் சூழல் யாழ்ப்பாணத்துக்கு வந்திராவிட்டால் நாவலர் என்ற தீரம் மிக்க பேராசான் சைவத்தமிழ்ச் சமூகத்துக்குக் கிடைத்திருக்கார்" என்பர் ஈழத்துச் சைவத்தமிழ்ப்பண்பாட்டு மரபின் ஆதிகர்த்தா நாவலரே எனத் தனது எழுத்தாலும் பேச்சாலும் அழுத்தம் திருத்தமாக எடுத்துக்கூறி, ஈழத் தமிழ் மக்களிடையே நாவலர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திய பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை அவர்கள்.

சமய குரவர்கள் தலங்கள்தோறும் யாத்திரை மேற்கொண்டு பண்ணிசைத் தமிழால் சிவன் புகழ்பாடி சைவத்தை நிலைநிறுத்தியதுபோலத் தன் காலத்துக்கு ஏற்புடையதும் பெருவழக்காவிருந்ததுமான வசன நடையில், தனக்குக் கைவந்த சொற்பொழிவுத் திறனால், வேதாகமங்களின் சாரம் சைவசித்தாந்தம் விளக்கும் நுண்பொருள் சைவத் திருமுறைகள் கூறும் அருங்கருத்துக்கள், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் போன்ற சைவக் கருவூலங்கள் விவரிக்கும் செம்பொருள் போன்ற இன்னும் பல ஆழ்ந்த செய்திகளை ஆற்றொழுக்கனைய தன் "நா" வன்மையால் மக்கள் மனங்களிற் பசுமரத்தாணி போற் பதியச்செய்தார். இதன்மூலம் கிறித்துவர்களின் தீவிர சமயப்போதனைகளால் தம் சுயம் மறந்து போலிகளில் மூழ்கியிருந்த மக்கள், உண்மையுணர்ந்து தம் சமயம், மொழி, பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றில் மீள் பற்றுக் கொள்ளவும் அவை காட்டும் வழியில் ஒழுகவும் தூண்டப்பட்டனர். நாவலரின் அதியற்புதமான சொல்வன்மையால் ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் சைவமும் தமிழும் மேலோங்கி வளர்ந்துவந்த சிறப்பினை மதிப்பீடு செய்த தமிழ்நாட்டு ஆதீனங்கள், பழமையும் பெருமையுமுடையதான திருவாவடுதுறை ஆதீனம் ஆகியவற்றின் பேராசான்கள் பலர் கூடியிருந்த அவையில் "நாவலர்" என்ற சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவித்தனர். "ஆறுமுகம்" என்ற இயற்பெயர் கொண்டவருக்கு ஆதீனம் வழங்கிய நாவலர் என்ற பெயரே பிற்காலத்தில் நிலைத்த பெயராகித் தமிழினத்தின் இதயங்களில் ஆழப் பதிந்துள்ளது. இந்த வகையில் பௌத்தம் சமணம் ஆகிய சமயங்களின் ஆக்கிரமிப்பில் இருந்து சைவத்தை மீட்டு மறுமலர்ச்சியுறச்செய்த "சமயகுரவர் நால்வர்" என்று போற்றி வணங்குவதுபோலக் கிறித்துவமத ஆக்கிரமிப்பிலிருந்து சைவத்தை மீட்டு வளர்த்த நாவலரை "ஐந்தாம் குரவர்" எனச் சைவ உலகம் போற்றி வழிபடுகின்றது.

சைவசமயத் தத்துவங்களை மிக இலகு தமிழில் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கும் வகையில் நாவலரால் வினாவிடை வடிவில் எழுதப்பட்ட முதலாம் இரண்டாம் சைவ வினாவிடைகள், சைவச் சிறார்கள் இளமையிலேயே தம் சமயம் கூறும் உண்மை களைத் தெரிந்து உணரவும் தம் சமயத்தில் பற்றுக்கொள்ளவும் உந்துசக்தியாக அமைந்தன.

சாதாரண மக்கள் படித்து விளங்கிக் கொள்ளமுடியாத வகையில் செய்யுள் நடையிலிருந்த சைவசமய தத்துவக் கருவூலங்களான கந்தபுராணம், பெரியபுராணம் போன்றவற்றினை இலகு உரைநடையில் எழுதி அந்த நூல்களிற் புதைந்துள்ள அருங் கருத்துக்களைச் சாதாரண மக்களும் படித்துணர வழியமைத்தார் நாவலர்.

சைவசமய உண்மைகளை விளக்கும் கந்தபுராணம் போன்ற மேற்குறித்த புராண நூல்களுக்கு உரைகூறும் "புராணபடன" மரபு ஒன்று யாழ்ப்பாணத்தில் ஆழ வேரூன்றவும் யாழ்ப்பாணக் கலாசாரம் என்றால் அது கந்தபுராணக் கலாசாரமேயென்று விதந்து

கூறுமளவிற்குச் சைவ வாழ்வியல் விழுமியங்கள் சிறக்க வழிவகுத்தவரும் நாவலரே.

சைவசமயத்தைக் கண்டித்துக் கிறித்துவ மிசனரி யினரின் தீவிர மதமாற்றப் பிரசாரங்களினால் சைவர்கள் மதம் மாறுவதை நிறுத்துவதற்கென மேலே குறிப்பிட்டனபோன்ற சைவப் பணிகள் பல ஆற்றிய நாவலர், சைவ சமயத்தவர்கள் கல்வியில் மிகமிகப் பின்தங்கியிருப்பதாலேயே கிறித்துவ மிசனரிகள் கல்வியைக் கருவியாகக் கொண்டு மதமாற்ற நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுக்க, கல்வியின் நன்மைக ளால் கவரப்பட்டு கிறித்துவர்களாக மாற, சைவம் குன்றுகிறது, கிறித்துவம் பரவுகின்றது என்பதனை நன்கு அவதானித்து, கிறித்துவ ஆக்கிரமிப்பிலிருந்த மேலே எடுத்துக் காட்டப்பட்ட சைவப் பிரசங்கம், புராணபடனம் போன்ற பிரசார நடவடிக்கைகளால் மீட்கப்படும் சைவம் நீடு நின்று நிலைக்கவேண்டுமாயின் கிறித்துவ மிசனரியைப்போலவே சமயத்துக்குக் கருவியாகக் கல்வியையும் ஒருசேர வளர்க்கவேண்டுமென்ற இன்றியமை யாமையினை நன்குணர்ந்து கல்வியை விருத்தி செய்வதற்கும் பாரிய திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தினார்.

சைவச் சிறார்கள் சைவச் சூழலிற் கல்விகற்று சைவநெறியில் வாழவேண்டுமென்ற உயர் நோக்குடனேயே சைவப் பாடசாலைகளை யாழ்ப்பாணம், கோப்பாய், மாதகல் முதலிய இடங்களிலும் சிதம்பரத்திலும் நிறுவினார். கிறித்துவர்கள் ஆங்கிலக் கல்வி மூலமாக மக்களை ஈர்த்ததனால், வேலை வாய்ப்புக்கள் போன்ற வாழ்க்கை வசதிகளை எதிர்பார்த்து அக்கல்வி நிறுவனங்களில் கல்விக்காகச் சேர்ந்து மதம் மாறுவதனை அவதானித்த நாவலர் 1872இல் சைவாங்கில பாடசாலை ஒன்றினை நிறுவி ஆங்கிலக் கல்வி வளரவும் வழிவகுத்தார். பணம் அறவிட்டுக் கல்வி போதிக்கும் நடைமுறை இருந்த காலத்தில், நாவலர் தான் நிறுவிய பாடசாலையில் பணம் பெறாமலே கல்வியை வழங்கினார். 1945இல் C W W கன்னங்கராவினால் இலங்கையில் இலவசக்கல்வி நடைமுறைப்படுத்துவதற்குச் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பே நாவலர் தான் நிறுவிய பாடசாலைகளில் இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தியமை மக்கள் நலனில் அவர் கொண்டிருந்த தீர்க்கதரிசனமான சிந்தனைக்குச் சிறந்தவொரு எடுத்துக் காட்டாகும். சைவாங்கில பாடசாலைகள் நிறுவு வதில் நாவலரின் வழிகாட்டலை முன்னு தாரணமாகக் கொண்டு சைவ சமூக சிந்தனையும் நிதிவளமும் ஒருசேர வாய்க்கப்பெற்ற சேர் பொன் இராமநாதன், Hindu board இராசரத்தினம், பாவலர் துரையப்பாபிள்ளை போன்ற பரோபகாரி களினால் சைவசமயக் கல்வி நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தின் முக்கிய பகுதிகளில் நிறுவப்பட்டு இருபதாம் நூற்றாண்டில் யாழின் கல்வித்தரம் பிரமிக்கத்தக்க வகையில் மேலோங்கியது.

பாடசாலைகளில் மாணவர்களுக்குச் சைவசமயப் பண்பாட்டுக் கல்வியுடன் கணிதம், வயித்தியம், வர்த்தகம், ஆங்கிலம், வேளாண்மை, அரசநீதி, சிற்பம், தருக்கம் போன்ற ஒரு வளரும் சமுதாயத்துக்கு தேவையான அனைத்தும் போதிக்கப்பட வேண்டுமென்ற நாவலர் கொண்டிருந்த எதிர்காலம் கருதிய தீர்க்கதரிசனமான கல்விச் சிந்தனைகள், நவீன கல்வியியற் துறைக்கு மிகமிகப் பொருத்தமானவையாகவும் முன் னோடியாகவும் அமைந்தன. இவ்வாறான கல்வி தாய்மொழியிலே போதிக்கப்படவேண்டும் என்பதே நாவலரின் கல்வித்திட்டமுமாகும். இலங்கையில், இலவசக் கல்விபோலவே, தாய்மொழிக் கல்வியும் சமயக்கல்வியும் 1945அளவில் அறிமுகப்படுத்துவதற்கு 100 ஆண்டுகளுக்கு முன்னரே தாய்மொழிக்கல்வி யினைத் தனது பாடசாலைகளில் ஆரம்பித்த நாவலரின் தீர்க்கதரிசனம் மிக்க சிந்தனை மட்டுமல்ல தாய்மொழியே கல்விப் போதனைக்கு உகந்தமொழி என அடித்துக்கூறும் இக்கால உளவியல் அறிஞர்களின் எண்ணக்கரு ஒரு நூற்றாண்டுக்கு முன் கல்விப்பணி ஆற்றிய நாவலரிடம் இருந்தமை அவரின் அதீத அறிவாற்றலையும் தமிழைப் பாதுகாத்து வளர்க்கவேண்டுமென்ற

வாஞ்சையையும் வெளிக்காட்டப் போது மானவை. பாடசாலைகளிலே கற்பிப்பதற்கென சமயம், வாழ்க்கை விழுமியங்கள், பல்துறை அறிவுசார்ந்த பாடப்புத்தகங்களை நாவலர் எழுதினார். சிறார்களின் அறிவை வளர்க்கவெனப் படிக்கிரமத்தில் அவர் எழுதிய பாலபாடங்கள் முக்கியமானவை. மாணவர்கள் இளமையிலேயே தம் சமய பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் நீதி நெறிகளையும் தம் தாய்மொழியின் அதிசிறப்புக்களையும் உணர்ந்து கற்கவேண்டுமென்ற நோக்கில் எழுதப்பட்டவையே நாவலரின் பாடப் புத்தகங்கள். அவற்றினை மதிப்பீடு செய்த அக்காலத்திய பிரபல இலக்கிய விமரிசகர் வ வே சு ஐயர் தமிழ்நாட்டில் எழுதப்பட்ட பாடப்புதத்கங்களைக் காட்டிலும் நாவலரால் எழுதப்பட்ட பாலபாடங்கள் வளரும் சமுதாயத்துக்குப் பொருத்தமான முறையில் இலகுவான இனிய தமிழ் நடையில், தெளிவாக எழுதப்பட்டதோடு தரத்தில் சிறந்தவை என்றும் தமிழ்நாட்டுப் பாடசாலைகளிலும் அவற்றி னையே பாடப்புத்தகங்களாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் - Native Public Opinion - என்ற பத்திரிகையில் எழுதியுள்ளமை நாவலரின் பாடப்புத்தகங்களின் தரச்சிறப்பையும் தமிழ்ப் பாடப்புத்தகங்கள் எழுதுவதற்கு அவரே வழிகாட்டி என்பதையும் விளக்கப் போதுமானவை. சைவத்துக்குத் தொண்டாற்றியவர் நாவலரெனச் சமயகுர வராகச் சமய வட்டத்துக்குள் அடக்கப்படும் நாவலர் இலங்கைப் பூமிசாத்திரம் என்ற பாடநூலை ஏன் எழுதவேண்டும்? தமிழர் கல்வி வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த அக்கறையே அவ்வாறான மாணவர்களுக்கான பாடநூல் எழுதக்காரணமாகும்

இலக்கண வழுவின்றித் தூய தமிழைக் கற்கவேண்டுமென்ற நோக்கங்கொண்ட நாவலர், தமிழ் இலக்கணத்தை மிக இலகுவான உரைநடையில் இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம் என இளம் வயதி னருக்கும், வகுப்பு உயர உயர, நன்னூற் காண்டிகையுரை, நன்னூல் விருத்தியுரை, இலக்கணக் கொத்து, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, சூடாமணி நிகண்டு உரை எனப் படிக்கிரமத்தில் எழுதித் தூய தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கும் வித்திட்டார்.

நாவலர் செந்தமிழில் கிறித்துவக் கண்டன நூல்கள் , பெரியபுராண சூசனம் போன்ற நூல்கள் எழுதுவதில் ஆற்றல்மிகு 'வசனநடை கைவந்த வல்லாளரா'யினும் சமயநூல்கள், பாடப்புத்தகங்கள் புராணங்களுக்கான உரை நூல்கள் என எழுதும்போது காலத்துக்கு ஏற்ற ஒரு நடையினை அறிமுகப்படுத்தித் தமிழ் உரைநடை வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தினார். சாதாரண கல்வியறிவுடைய மக்கள் வாசித்து விளங்கி உணர்ந்து சமயப்பற்றும் தாய்மொழிப்பற்றும் மிக்க சமூகமாகக் கல்வியில் உயரவேண்டுமென்ற நோக்கிலேயே அவர்களின் அறிவு விருத்திக்கு ஏற்றவொரு கருவியாக தமிழ் உரைநடையினைப் பயன்படுத்தினார். சிறு சிறு வசனங்களிற் சந்தி விகாரமின்றி, இலக்கண வழுவின்றிப் பொருத்தமான இடங்களில் அறநூற் கருத்துக்கள் , மேற்கோள்கள், உவமைகள் , வடமொழிச் சொற்கள் என, விரவிவரக் கூறவந்த கருத்து வாசிப்பவர் மனதில் இலகுவாகப் பதியும்வண்ணம் ஒரு இனிமையான இலகுவான உரைநடயினை நாவலர் தமிழில் கையாண்டமைதான் நாவலரால் தமிழ்மொழி பெற்ற மிகப்பெரிய வளம் எனலாம். அவரைத் "தற்காலத் தமிழுரைநடையின் தந்தை" என விதந்து கூறுவதற்கும் அதுதான் காரணமாகும். ஆங்கிலத்தில் உள்ள மொழிக்கு அழகுசேர்க்கும் குறியீடு முறைகளைத் தமிழில் புகுத்திக் கட்டுரை என்னும் இலக்கிய வடிவத்தினைச் செம்மையாகக் கையாண்டு தமிழ் உரைநடையினை வளம் படுத்தியவரும் நாவலரே!

ஏட்டுச் சுவடிகளில் அழியும் நிலையிருந்த அரும்பெரும் இலக்கியக் கருவூலங்களான பழந்தமிழ் நூல்களைத் தேடிப்பெற்று, நுணுகி ஆராய்ந்து பரிசோதித்துப் பாடல்களையும் உரையையும் மூலப்பிரதிகளுக்கு மாறுபடாமல் ஒழுங்கமைத்துப் பதிப்பித்தலிலும் நாவலருக்கு

நிகர் நாவலரே. தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையர் உரை, திருக்குறள் மூலமும் உரையும், நன்னூல் விருத்தியுரை, சூடாமணிநிகண்டு உரை எனப்பல பழம்பெரும் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்ட நாவலரின் பதிப்புப்பணி அவருக்குப் பின் சி வை தாமோதரப்பிள்ளை, உ வே சாமிநாதையர் போன்ற பெரும் பதிப்பாசிரியர்களுக்கு முன்னோடியாக அமைந்து மேலும் பல பழம்பெரும் நூல்கள் பதிப்பிக்கப்படக் காரணமாயிற்று. “நாவலர் பதிப்பென்றால் தூய பதிப்பு” என்பது தமிழ்கூறும் நல்லுலகில் நாவலர் பதிப்பித்த நூல்களுக்கான சிறப்ப டையாளமாகும். நாவலர் பதிப்புத்துறையில் ஈடுபடாது இருந்திருப்பின் அருந்தமிழ் நூல்கள் பல தமிழ் கூறும் நல்லுலகுக்கு கிடைத்திருக்காத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கும்.

கிடைத்தற்கரிய சைவம், தமிழ்சார்ந்த நூல்கள் எல்லாம் ஏட்டுச் சுவடிகளாக இருந்தமையும், அவற்றை எல்லோரும் பெற்றுப் படித்துத் தம் சமயம்பற்றி அவைகூறும் பண்பாட்டுப் பாரம்பரியம்பற்றி அறியும் வாய்ப்பு இல்லாதிருந்தமையும், அச்சு யந்திரசாலைகள் போன்ற நவீன வசதிகளைக் கொண்டிருந்த மிசனரியினரின் மதப் பிரசாரத்தினால் கவரப்பட்டுத் தமிழ்மக்கள் மதம் மாறக் காரணம் என்பதனை உணர்ந்த நாவலர், அச்சுயந்திர சாலைகளை யாழ்ப்பாணத்திலும், தமிழ் நாட்டில் சிதம்பரத்திலும் நிறுவித் தான் எழுதியனவும் உரை வகுத்தனவும் பதிப்பித்தனவுமான நூல்கள் அனைத்தையும் அச்சிடும் பணியை விரிவாக்கினார். தமிழ்க்கல்வி விருத்தி பற்றிய எதிர்கால நோக்குக் கொண்ட தீர்க்கதரிசனமான சிந்தனையுடன் நூல்களை அச்சிடும் பணியை விரிவாக்க நாவலர் மேற்கொண்ட முன்னோடி நடவடிக்கை தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் பாரிய மறுமலர்ச்சி ஏற்பட வழிகாட்டியாக அமைந்தமை நாவலரின் பன்முகப் பணிகள் பலவற்றுள்ளும் தலையாயது.

நவீன உலகில் கருத்துச் சுதந்திரத்துக்கு இன்றியமையாச் சாதனமாக அமைந்து பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கி ஜன நாயகத்தை மேன்மையுறச் செய்யும் பத்திரிகைகளிலும், நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை உடனுக்குடன் உண்மைச் செய்திகளாகவும் தவறுகளைக் கண்டித்தும் விவாதித்தும் கேலிசெய்தும் ஆங்கிலத்தில் வரும் செய்திகளைத் தமிழில் மொழி பெயர்த்தும் கேள்வி - பதிலாக தம் காலத்தில் வெளிவந்த இலங்கை நேசன், இலங்காபிமானி, உதயதாரகை போன்ற பத்திரிகைகளில் எழுத்து, சொல், வசனப் பிழைகள் எதுவுமின்றிச் சாதாரண மக்களும் நாட்டு நடப்புக்களை வாசித்து விங்கிக்கொள்ளக் கூடியதாக இலகுவான செந்தமிழ் நடையில் எழுதிப் பத்திரிகைத் தமிழ் வளர்ச்சிக்கும் வழிகாட்டியவர் நாவலரே.

சாதாரண மக்களுக்குப் பயனளிக்காதது நவீன காலத்துக்கும் ஏற்றதாகாது என்பதை நன்குணர்ந்த நாவலர், காலத்தின் தேவைகருதி வசனநடையைக் கையாண்டு தன் செயற்பாடுகளை முன்னெடுத்தனர். எனினும் அவர் செய்யுளியற்றும் ஆற்றலும் கைவரப்பெற்றவர் என்பதற்கு அவர் தந்தையால் எழுதி முடிவுறாதிருந்த “இரத்தினவல்லி விலாசம்” என்ற கவிதை நாடகத்தைப் பாடிமுடித்ததுடன், அராலி மேற்கு விசாலாட்சி சமேத விஸ்வநாதர் கோயில் சிவன், விசாலாட்சி, கணபதி மூவர்மீதும் மூன்று செய்யுள்கள் பாடியதும் தக்கசான்றுகள் ஆகும்.

ஈழத்தின் பஞ்ச ஈஸ்வரங்கள் என அழைக்கப்படும் ஆலயங்களுள், கீரிமலை நகுலேஸ்வரம், மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆகிய தொன்மையும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க இரு சிவாலயங்களும் போர்த்துக்கேயர் போன்ற வெளிநாட்டு ஆட்சியாளர்களால் அழித்தொழிக்கப்பட்டன என்றும், மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையே அமைந்த மகிமையும் சிறப்பும் பெற்ற அச்சிவாலயங்கள் புனரமைக்கப்பட்டு மக்கள் வழிபாட்டுக்கான சிவத்தலங்களாக விளங்கச் செய்யவேண்டும்

என்றும், சிவவழிபாட்டை முதன்மையாகக் கொண்ட சைவனின் தலையாய கடமை அது என்றும் நாவர் வெளியிட்ட விஞ்ஞாபனங்களே அக்கோயில்களின் இன்றைய புதுப் பொலிவுக்கும் சிவவழிபாட்டுச் சிறப்புக்கும் உந்துசக்தியாக அமைந்தன.

அரசொன்றின் அமைச்சு, திணைக்களங்களைச் சேர்ந்த நிபுணர்கள் சேர்ந்து திட்டமிட்டு முன்னெடுக்கவேண்டிய செயற்பாடுகளைத் தனி மனிதனாக. பணபலம் ஆட்பலம் நிறைந்த கிறித்துவ மிசனரிக்கெதிராக அதற்கு நிகராக தன் குறுகிய வாழ்க்கைக் காலத்தில் நாவலர் சாதித்தவை இமயம் போன்றவை.

தமிழ்கூறும் நல்லுலகம் இலக்கண, இலக்கியப் பேராசான், சொற்பொழிவுக் கலையின் ஆதிகர்த்தா, தற்காலத் தமிழ் உரைநடையின் தந்தை, தமிழ் நூற்பதிப்பின் முன்னோடி, பாடநூல் வழிகாட்டி, புராணபடன உரை மரபின் மூலவர் எனப் பலவாறு விதந்து போற்றப்படும் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மறைந்து *135* ஆண்டுகள் ஆகியும் அவரை யொத்த செயல்திறன் மிக்கப் பேராசான் ஒருவர் எம்மிடையில் இன்னும் தோன்றவில்லை என்பதை எண்ணும்போதுதான் எதிர்காலத்துக்கு இன்றியமையாதவை எவையெனச் சிந்தித்து தீர்க்கதரிசனமான சிந்தையுடன் ஓயாது ஒழியாது செயற்பட்ட நாவலரின் பணிகளின் மாண்பும் மகத்துவமும் எளிதில் தெளிவாகின்றன.

“மேல்நாட்டு நாகரிகத்துக்கும் வாழ்க்கை முறைக்கும் அடிமையாகித் தமிழினம் தன்னிலை தவறித் தத்தளித்த வேளையில் அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக, கலங்க ரைவிளக்காக விளங்கிய நாவலர். ஈழம் வாழ் தமிழினத்தின் மிக நெருக்கடியான காலத்தில் அவர் தோன்றிப் பணிபுரிந்திராதிருந்தால் தமிழர் வரலாறே வேறுவிதமாக அமைந்திருக்கும். நாவலருடைய சமயப்பணி முக்கியமான தாயினும் அவர் தமிழுக்கும் தமிழ்ப்பிள்ளை களின் கல்விக்கும் தனி மனிதனாக நின்று ஆற்றிய பணி என்றும் நன்றியுடன் போற்றுதற்குரியது” என்று தமிழினத்தின் அன்புக்கும் மதிப்புக்குமுரிய அமரர் சா ஜே வே செல்வநாயகம் நாவலர் பணிகள் வரலாற்று முக்கியத்தினை இரத்தினச் சுருக்கமாக (*1969* நாவலர் மாநாட்டு மலரில்) மதிப்பிட்டுள்ளமை ஒப்புநோக்கத்தக்கது.

## பண்டிதமணி

பண்டிதமணி கண்டனக்காரர் என்று பெயர்பெற்றிருந்தார். நாவலர் பெருமானின் பெருமை களைக் குறைத்துப் பேசியும், எழுதியும் வந்தவர்களையும் அவரின் உண்மைச் சரித்திரத்தை இருட்டடிப்புச் செய்தவர்களையும், சி வை தாமோதரம்பிள்ளையின் பதிப்புப் பணிகளைத் திரித்துக் கூறியவர்களையும் பண்டிதமணி விட்டுவைக்கவில்லை. அவர்களைக் கண்டித்துத் தக்க பதில் கொடுத்துள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றை உருவாக்குவதிலும், தமிழ் இலக்கிய இலக்கண மறுமலர்ச்சியைத் தோற்றுவித்து வளர்ப்பதிலும் இலங்கைத் தமிழறிஞர்களின் பங்கு கணிசமானது. இந்த உண்மையைத் தாங்கிக்கொள்ள முடியாத தமிழ்நாட்டு அறிஞர்கள் சிலர் இவ்வாறு இலங்கைத் தமிழறிஞர்களுக்கு எதிராக அவதூறுகள் கிளப்பினார்கள். இதனை எதிர்த்து நாவலர் பரம்பரையினர் சார்பாக போர்க்கொடி தூக்கிய பண்டிமணி பொய்ம்மையாளரைக் கண்டித்தது உண்மைதான். அதனால் அவர் வரட்டுப்போக்கோ குறுகிய மனப்பான்மையோ கொண்டவர் என்று கூறிவிடமுடியாது.

**நன்றி: நல்லைநகர் நாவலர் பெருமான் வழியில் பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை**

சோழ நாட்டில், திருப்பெருமங்கலம் என்னும் அழகிய நகர் ஒன்று உண்டு. அது காவிரியின் பொன்கொழிக்கும் வடகரையில், கிழக்குத் திசையிலே அமர்ந்துள்ளது. அந்நகரின் மதில்களில் இயந்திரங்கள் வரிசையாக நிறைந்திருக்கும். அங்குள்ள பெண்களின் கண்களில் காதல் மயக்கின் நஞ்சு வேகம் சூழ்ந்திருக்கும். ஆண் பெண் கூடலின்போது பெண்கள் செம்பஞ்சுக் குழம்பு பூசிய தங்கள் மெல்லிய பாதத்தால் உதைப்பதால் ஆண்களின் குடுமிகளில் காதலியரின் பரந்த சின்னங்களாகச் செம்பஞ்சுக் குழம்பும் படிந்திருக்கும். கூந்தல் அழகிகளின் நடன அரங்குகளிலே ஓயாமல் மத்தள ஓசை கேட்கும். மங்கலம் பொலிவுறும் மாளிகை முற்றங்களில் குழந்கைள் ஓயாமல் விளையாடுவார்கள்.. அவ்வூர்க் குடிமக்கள் உழவுத் தொழிலில் நீங்காத பெரும் வளமைகளைக் கொண்டிருப்பார்கள். நெற்றியிலே திருநீறு அணிந்திருக்கும் சிவனடியார்கள் அந்நகர் முழுவதும் நிறைந்திருப்பார்கள். அவர்கள் செய்யும் வழிபாட்டுச் சிறப்பினால் அந்த நகரம் சிவபுரியைப்போல் விளங்கும்.

இத்தகைய சிறப்புரிய திருமங்கலம் என்ற ஊரில் 'ஏயர்கோன்குடி' என்ற புகழ்வாய்ந்த குடியினர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வேளாண்மையில் சிறந்தவர்கள். பரம்பரை பரம்பரையாகச் சோழமன்னர்களின் சேனாதிபதியாக விளங்கும் குடிச்சிறப்பைப் பெற்றவர்கள்.. இத்தகைய பெருமை வாய்ந்த குடியிலே கலிக்காமர் என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு சிவபக்தன்.

# ஏயர்கோன் கலிக்காமநாயனார்

சிவனடியார்களின் திருவடிகளை வணங்கிப் பொங்கும் அன்போடு அவர்களுக்குப் பணிகள் பல செய்து சிறந்து வாழ்ந்தார். சிவபெருமான் கோயில் கொண்டிருக்கும் திருப்புன்கூர் என்னும் சிவத்தலத்தில் அவர் அநேகத் திருப்பணிகளைச் செய்து "திருநீற்றை விரும்பும் சிவபெருமானின் திருவடியே உண்மையான செல்வம்" என்று ஏயர்கோன் கலிக்காமர் கருதி இறைவனைத் துதித்து இன்புற்று வந்தார்.

"நம்பியாரூரனான சுந்தரர் சிறிதும் மனம் நடுங்காமல், அச்சமின்றித் தம்பிரானான சிவ பெருமானையே ஒரு பெண்ணிடத்துத் தூதுவிட்டார்" என்ற செய்தியைத் திருபெருமங்கலத்தில் இருந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார் கேட்டு மிக மனம் வெதும்பினார். அதிசயித்தார். வெகுண்டு மிகக் கோபம் கொண்டார். "இத்தகைய செயலை யார் செய்வார்?"என்று அவர் சுந்தரமூர்த்தி நாயனாரைக் குறைகூறிக் கொண்டேயிருந்தார். "ஆண்டவனையே அடியான் தூது அனுப்புவதோ? சிவலோக நாயகனையே ஓர்அடியான் ஏவும் காரியம் நன்று! இச் செயலுக்கு தூண்டத் துணிந்த ஒருவனும் திருத்தொண்டனா? கேவலம் ஒரு பெண்ணின் பொருட்டு ஆண்டவனையா தூது விடுவது? என்ன பாவம்! இந்தப் பொறுக்க முடியாத பிழையை என் செவியுறக் கேட்டும் என் ஆவி மாயவில்லையே! நானும் பேயேன் ஆனேன்.!"

"பெண்ணொருத்தியின் புலவியைத் தீர்த்து அவளிடம் செல்லவேண்டும் என்கின்ற காதலால் ஒரு அடியான் ஏவிவிட, ஆண்டவன் தன் திருவடிகள் நோகத் தெருவில் நடந்தாராமே? திருவாரூர் வீதியில் போவதும் வருவதுமாய் ஓரிரவு முழவதும் அடியானுக்காக ஐயன் தூதனாக உழன்றானாமே! இது என்ன கொடுமை?" என்பார். "அரியும் பிரம்மாவும் அகில தேவர்களும் அறியவொண்ணாத ஆண்டவன் தான் தம்முடைய அடியார்களுக்கு ஆற்றாராகிப் பொண்ணொருத்தியிடம் தூதுபோக இசைந்தாலும் அவரை அடியானான ஒருவன் தூதுக்கு ஏவலாமோ"? அப்படி ஏவுதற்கும் நடுங்காமல் மனந்துணிந்த அத்தகைய தொண்டனவனை என்

கண் முன்னால் காணும் நாள் எந்த நாளோ? ஆரணங்கு ஒருத்தியின் மீதுள்ள ஆசையின் காரணத்திற்காக ஆளுடைய பரமசிவனை அர்த்தராத்திரியில் தூது போகும்படி ஏவிவிட்டுக் காத்திருந்த அந்தத் தொண்டனை என் கண்முன் வரக் காண்பேனாகில் என்னதான் விளையுமோ?" இதைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் இவ்வாறு கூறுகிறார்

**"நம்பர்தாம் அடியார் ஆற்றராகியே நண்ணினாரேல்**
**உம்பரார்கோனும் மாலும் அயனும் நேர் உணரவொண்ணா**
**எம்பிரான் இசைந்தார் ஏவப்பெறுவதே இதனுக்குள்ளம்**
**கம்பியா தவளை யான்முன் காணுநாள் என் நாளென்று"**

இவ்வாறெல்லாம் கலிக்காம நாயனார் மனங்குமுறி சுந்தரர்மீது வெறுப்பும் கோபமும் கொண்டிருந்தார். கலிகாமநாயனாரின் கோபத்தைப்பற்றிச் சுந்தரமூர்த்தி நாயனார் கேள்விப்பட்டார். உண்மையிலேயே தான் செய்தது பிழைதான் என்று சுந்தரர் உடன்படுவாராகி, அதற்குத் தீர்வுகாணவேண்டி, நாள்தோறும் சிவபிரானிடம் சென்று, முறையிட்டு வந்தார். சிவபெருமான் சிறந்த சிவனடியார்களான அவர்களிருவரையும் ஒருமைப்படுத்தத் திருவுளம் கொண்டார். எனவே அவர்களிருவரும் நட்புப் பூண்டு ஒன்றுகூடும் தன்மையை அருள் செய்வதற்காக உடலை வாட்டிக் கொடுமைபுரியும் "சூலை நோயினை" ஏயர்கோன் கலிக்காம நாயனாரிடம் ஏவிவட்டார். இறைவர் ஏவிய சூலையானது, நெருப்பில் காய்ச்சிய வேல் குடைவதைப்போல, கலிக்காம நாயனாரைப் பற்றிக் முடுக்கிக் குடைந்தது.

அந்தச் சூலைநோயின் வேதனைக் கொடுமையைக் கலிகாம நாயனாரால் தாங்க முடியாமல், சிவபெருமானின் பொன்னடிகளைத் தம் மனத்தாலும் வாக்காலும் போற்றினார். அப்போது சிவ பெருமான், கலிக்காமரின் முன்வந்து தோன்றி. உன்னை வாட்டி வதைக்கின்ற இந்தச் சூலைநோய் வன்றொன்டன் சுந்தரர் தடுத்தாலன்றி வேறு எந்த வழியாலும் தீராது என்று கூறினார். ஏயர்கோன் கலிக்காமர் அதைக்கேட்டு "எம்பெருமானே! ஏன் தந்தையும் என் பாட்டனும், முப்பாட்டனும், எமது கூட்டம் முழுவதும் காக்கும் நீரே. எமது இறைவர் என்று வழிவழியாக வழியடிமைத் தொண்டு செய்யும் மரபிலே தோன்றியவன் நான்! அப்படிப்பட்ட என்னை வருத்தும் இந்தச் சூலைநோயைப் புதிதாக நீர் வம்பென ஆண்டுகொண்ட ஓர் அடியானோ வந்து தீர்ப்பான்? அவன் வந்து தீர்ப்பதைக் காட்டிலும் இந்த நோய் தீராமலே என்னை வாட்டி வதைப்பது நன்று!, இடபக் கொடியுடைய பெருமானே! உமது பெருமையை யாவரே அறிந்தவர்? வன்றொன்டனுக்கோ ஆகின்ற உறுதியைச் செய்தீர்!" என்று கூறி வருந்தினார். சிவபெருமான் அப்போதே மறைந்துவிட்டார்.

அதன்பின் சிவபெருமான், வன்றொண்டரான சுந்தரரிடம் சென்று, "இன்று நம் ஏவலாலே ஏயர்கோன் சூலைநோயினால் வருந்துகிறான். நீ சென்று அந்நோயைத் தீர்ப்பாயாக!" என்ற கூறி மறைந்தார்.

நம்பியாரூரர் மிகவும் மகிழ்ந்து, சிவபெருமானின் திருவடிகளை வணங்கி ஏயர்கோனது நட்பைக் கருதும் கண்ணியமான மனத்துடன் கலிகாம நாயனாரின் சூலைநோயைத் தீர்க்கும் பொருட்டும் தாம் வரும் செய்தியினை ஆள் மூலம் சொல்லியனுப்பிவிட்டுத் தாமும் திருவாரூரிலிருந்து விரைந்து புறப்பட்டுக் கலிக்காம நாயனாரின் ஊரை நோக்கிச் சென்றார். கலிக்காமரோ, இறை வரின் அருளினாலே தமக்கு வந்த சூலைநோயும், அதன்மேல் இறைவர் மொழிந்தருளியதைக் கேட்ட துன்பம் தரும் மொழியும், தம்மை மிகவும் வேதனை செய்வது போதாதென்று அதன் மேலும் வன்றொண்டரது வரவைப் பற்றிக் கேள்விப்பட்டதும், எம்பெருமானை தூதனாக ஏவிய

நம்பியாரூரன் இங்கு வந்து என் நோயைக் தீர்ப்பானாகில் குற்றம் வந்து சேருமே, அப்போது நான் என்ன செய்வேன்? என்னைப் பற்றிக்கொண்டு நீங்காமல் வாட்டும் இந்தப் பாதகச் சூலை நோயை அந்த ஆரூரன் வந்து தீர்ப்பதற்கு முன் இச்சூலைநோய் தங்குவதற்கு இடமாகவுள்ள என் வயிற்றோடும் கிழத்து அழித்து விடுவேன்" என்று துணிந்து, தமது உடைவாளை எடுத்துத் தம் வயிற்றைத் தமக்குத்தாமே கிழித்துக் கொண்டார். உடனே அவரைப் பற்றியிருந்த சூலைநோயும் அப்பொழுதே தீரந்தது. இதைச் சேக்கிழார் இவ்வாறு கூறுகிறார்:

**"மற்றவன் இங்கு வந்து தீர்ப்பதற்கு முன் நான் மாயப்**
**பற்றி நின்றென்னை நீங்காப் பாதகச் சூலை தன்னை**
**எற்ற இவ்வயிற்றினோடும் கிழிப்பன் என்று உடைவாள் தன்னால்**
**செற்றிட உயிரினோடும் சூலையும் தீரந்த தன்றோ"**

அதைக் கண்டு எண்ணுதற்கரிய பெருமையும் அன்புள்ளமும் கொண்ட கலிக்காமரது தேவியாரும் தன் கணவரோடு உயிர் துறந்து, தானும் போவதையே விரும்பி அதற்கு உரியனவற்றைச் செய்யலானார். அப்போது "நம்பியாரூரர் வருகிறார்" என்று பரிஜனங்கள் முன்னால் ஓடிவந்து கூறினார்கள். உடனே அந்த அம்மையார், அங்கு அழுது கொண்டிருந்தவர்களை நோக்கி, "இங்கு ஒருவரும் அழாதீர்கள்!" என்று கூறித் தன் கணவரின் தற்கொலை நிகழ்ச்சியை மறைத்தார். பிறகு காவலாளர்களை நோக்கி, சுந்தரமூர்த்திநாயனார் இங்கு எழுந் தருளும்போது "திருமனையை நன்கு அலங்கரித்து எதிர் கொள்ளுங்கள்" என்று கட்டளையிட்டார். அம்மையாரின் கட்டளைக்கேற்பக் காவலர்கள் அந்த வீட்டின் வாசல் களிலெல்லாம் விளக்குளையும், நிறைகுடங்களையும் வைத்து, மலர் மாலைகளைத் தொங்கவிட்டு நற்சிந்தனையோடு நம்பியாரூரை எதிர்கொண்டு வரவேற்று வணங்கினார்கள். ஆளுடைய நம்பிகள், அவர்களுக்கு புன்முகம்காட்டி விருப்பத்துடன் மாளிகையினுள்ளே வந்தார். அப்பொழுது மனை ஆட்கள் நம்பியாரூரரை ஒரு மலர்த்தவிசின்மீது அமரச்செய்து, சம்பிரதாய முறைப்படி அர்ச்சனையெல்லாம் செய்ய அவர் அவற்றை ஏற்றுக்கொண்டார்.

பிறகு நம்பியாரூரர், அவர்களை நோக்கி, "இப்பொழுது கலிக்காமருக்குத் துன்பம் செய்யும் சூலை நோயை நீக்கி, அவருடனிருப்பதற்குக் காலம் தாழ்ப்பது குறித்து தாம் மிகவும் வருந்துகின்றோம்" என்று கூறினார். அதற்குள் கலிக்காமரின் மனைவியாரின் ஏவுதல்படி அவரது வேலைக்காரர்கள், "இங்கே கெடுதி ஒன்றுமில்லை! கலிக்காமர் உள்ளே பள்ளி கொள்கின்றார்!" என்று கூறினார்கள். அதைக் கேட்டதும் சுந்தரர், "அவருக்குத் தீங்கில்லை என்றாலும், இன்னமும் என்மனம் தெளிவடையயவில்லை. ஆகையால் நான் அவரைக் காணவேண்டும்" என்றார். மேன்மேலும் அதையே வன்றொன்டர் வலியுறுத்தினார். அதனால் வேறு வழியின்றி ஏவலாளரும், நம்பியாரூரரை உள்ளே அழைத்துச் சென்று ஏயர்கோன் கலிக்காம நாயனாரைக் காட்டினார்கள். உடலில் குருதி மிகவும் வடிய வயிறு அறுப்புண்டு குடல் சரிந்து, உயிர் நீங்கிக் கிடந்த கலிக்காமரை நம்பியாரூரர் கண்டதும், "நிகழ்ந்தவாறு நன்று, இவர் முன் இவ்வாறே நானும் உயிர் துறப்பேன்!" ஏன்று கூறித் தற்கொலை செய்து கொள்ளத் துணிந்து குற்றுடைவாளைத் தம் கையிலெடுத்தார்.

அப்பொழுது, சிவபெருமான் திருவருளால் ஏயர்கோன் கலிக்காமநாயனார் மீண்டும் உயிர்பெற்று உய்ந்து, "நண்பரே! அந்தோ கெட்டேன்" என்று விரைந்தெழுந்து வன்தொண்டரின் கையிலிருந்த வாளைப் பிடித்துக் கொண்டார். உடனே வன்தொண்டர் பணிந்து கீழே விழுந்து கலிக்காமரை வணங்கினார். அவரைக் கலிக்காமரும் கழலடிகளில் விழுந்து வணங்கினார். இந்த அற்புதத்தைக் கண்டு உலகத்தார் போற்றினார்கள். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள்.. நாயனார்கள் இருவரும்

எழுந்து ஒருவரையொருவர் தழுவிக் கொண்டார்கள்.. அதன் பிறகு இடைவிடாத நட்பினாலே இருவரும் பெருமகிழ்ச்சி கொண்டு, "திருப்புன்கூர்" சென்று அங்கு கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானின் திருவடிகளைப் பணிந்து துதித்தார்கள். சுந்தரமூர்த்தி நாயனார் தம்பிரானின் திருவருட் பெருமையை நினைத்து "அந்தணாளன்" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி வணங்கினார்.

இவ்வாறு சிலநாள் கழிந்த பின்னர் நம்பியாரூரர், ஏயர்கோன் கலிக்காமநாயனாருடன் திருவாரூர் சென்றார். ஆங்குப் பூங்கோயிலில் குடிகொண்டிருக்கும் தியாகேசரை, இருவரும் வணங்கினர். ஏயர்கோன் சிலநாள்கள் திருவாரூரிலே தங்கியிருந்தார். பிறகு நம்பியாரூரரிடம் விடைபெற்று, மீண்டும் தம் ஊருக்குச் சென்று அங்கு தமக்குரிய பல திருத்தொண்டுகளைப் புரிந்து வாழ்ந்துவிட்டுக் காலமாகிச் சிவபெருமானின் திருவடி நிழலை அடைந்தார். நள்ளிரவில் எம்பெருமானைத் தூதுவிட்ட நம்பியாரூரர் மீது கோபங்கொண்டு பிறகு அவருக்கே நண்பரான ஏயர்கோன் கலிக்காமநாயனாரின் மலரடிகளை வணங்குவோம்.

**"ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்"**

**-சுந்தரர்**

# Charity, how should it be done?

In Western countries, Philanthropy has been institutionalized. But in our Vedic tradition, individuals and associations have been performing many acts of philanthropy without really institutionalizing it. The greatest factor about lack of institutionalization is that there is least chance of 'Ego/Pride' dominating the entire act. Since the charity is performed naturally, as a part of life, there is little chance of arrogance creeping in. Once an institution is formed, office bearers have to be elected. Politics and publicity naturally follow. Keeping this in mind, I have advised people to perform social service through the existing devotional and spiritual groups even when the service requires coming together of a number of persons. I also warn against mega plans and fund collection drives (beyond the requirement) for the very same reason. Such efforts will require publicity for the organization and eventually this will tempt us into efforts for self publicity. We may want to play an important part in the functions like garlanding the chief guest and will be eager to pose for the publicity photos. The social service which is supposed to negate our ego will end up inflating it – what a negative consequence! Social Service should be done quietly without any-one knowing it. Our sastras have this valuable advice to offer – as sins are mitigated by admitting to them, similarly the Punnya or the Goodwil one earns is lost by publicizing the good acts we have done. There is a subtle terminology in Sanskrit called "Dharma Dhwajan" – the one who is holding the flag of charity aloft. Though on face this seems to be a eulogy, it actually cynically means that the person is a false philanthropist who has lost the value of the charitable acts he has performed by publicizing them.

**– Jagadguru Sri Chandrasekharendra Saraswathi Swamigal**

Courtesy: teyvatin kural By: London Sabari

# ஜோதிலிங்கங்கள்

சாவகச்சேரியூர் Dr. கதிர்காமநாதன்

உண்மைச் சம்பவம் ஒன்றை இங்கு சொல்ல விரும்புகிறேன். ஆண்டு 1956. என் பெற்றோர் இந்தியாவுக்கு யாத்திரை போகத் தீர்மானித்தார்கள். நாங்கள் இருந்தது ஒரு சிறு கிராமம் என்பதால் இவர்களின் யாத்திரைச் செய்தி ஊரெங்கும் காட்டுத் தீபோலப் பரவிவிட்டது. எங்கள் கிராமத்தில், எங்களுக்குச் சலவைத் தொழில் செய்யும் ஒருவர் இருந்தார். அவருக்குத் திருமணமாகியும் பல வருடங்களாகப் புத்திரப் பேறு கிடைக்கவில்லை. அவரும் என் பெற்றோருடன் யாத்திரை போக விரும்பி, என் பெற்றோரை அணுகினார், தன் விருப்பத்தைத் தெரிவித்தார். பெற்றோரும் அவரை அழைத்துச் செல்லச் சம்மதித்தனர்.

நான் அப்போது சிறுவன், பதின்ம வயதினன். பெற்றோரும் நானும் இந்தச் சலவைத் தொழிலாளரும் அவர் மனைவியும் வேறும் இரு பெண்களுமாக ஏழுபேர், நல்ல நாள் பார்த்து, யாத்திரைக்குப் புறப்பட்டோம். அந்தக் காலத்தில் அன்றாடம் உழைத்து அன்றாடம் உண்ணும் சிறிய வருமானத்தில் வாழும் குடும்பங்கள் என்பதால் இப்படியொரு யாத்திரை போவது மிகவும் அதிசயமான ஒரு நிகழ்வு. அதனால் ஊரே திரண்டு வந்து சாவச்சேரிப் புகைரத நிலையத்தில் எங்களை வழியனுப்பி வைத்தது.

காங்கேயன்துறையிலிருந்து மாலை புறப்பட்டு மறுநாள் காலை கொளும்பு செல்லும் ரயில் வண்டியை மெயில் ரயில் என்று சொல்வர். அதன் முதலாவது பெட்டி தலைமன்னார் போவதற்கான பெட்டி. மதவாச்சி நிலையத்தில் இது கொளும்பு வண்டியிலிருந்து கழற்றப்பட்டு கொளும்பிலிருந்து வரும் தலைமன்னார் ரயிலுடன் இணைக்கப்படும். பின்னர் தலைமன்னாரை அடையும்.

தலைமன்னாரிலிருந்து கப்பல் மூலம் நாம் தனுஷ்கோடியை அடைந்தோம். சிறுவனாக இருந்த எனக்கு இதுவெல்லாம் புதுமையான, சுவையான, அதிசயமான அநுபவமாக இருந்தது. பசி வயிற்றைக் கிள்ளியது. எப்போது சாப்பிடலாம் என்று ஏங்கிக்கொண்டிருந்த எனக்கு உப்புமா கிடைத்தது. வாழ்க்கையில் முதன் முதல் நான் உப்புமா சாப்பிட்டது அன்றுதான். பின்னர் புகைரதமூலமாக இராமேசுவரத்தை அடைந்தோம். அங்கு அன்றிரவு ஒரு சிவாசாரியார் வீட்டிலே தங்கினோம்.

மறுநாள், காலையில் அக்கினி தீர்த்தம் ஆடி, தொடர்ந்து 22 தீர்த்தங்களிலும் ஆடினோம். பின்னர் கோயிலுக்குச் சென்று இரமநாதசுவாமியை வணங்கினோம். அந்தத் தொழிலாளரின் மனைவியின் கண்களிலிருந்து தாரைதாரையாகக் கண்ணீர் பெருகியது. இதுவும் எனக்கு அதிசயமாக இருந்தது.

அன்றுமாலை இத் தம்பதியருக்கு சாந்திஹோமம் நடைபெற்றது. புத்திரபாக்கியம் இல்லாதோருக்குச் செய்யும் யாகம் செய்தார்கள். சிவாசாரியர் சிலர் ஹோமம் வளர்த்து மந்திரங்களை உச்சரித்து யாகம் செய்தார்கள். அந்தப் பெண் தொடர்ந்து அழுதுகொண்டேயிருந்தார். பத்தியா, கவலையா பயமா எனக்கு ஒன்றும் புரியவில்லை.

அந்த யாகம் முடிந்து சரியாக ஒரு வருடத்தில் அந்தத் தம்பதிக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. அவர்களின் மகிழ்ச்சி அளவிடமுடியாதது. அதன்பின் இரு ஆண்குழந்தைகளும் ஒரு

பெண்குழந்தையுமென மொத்தம் நான்கு குழந்தைகளுக்கு அவர்கள் பெற்றோர் ஆனார்கள். ஜோதிலிங்க தரிசனத்தால் அவர்களுக்குப் பிள்ளைப்பேறு கிடைத்தது என்றே நான் நம்புகிறேன். கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

"ஞாயிறின் சோதி அன்னானவன்" - சம்பந்தர்
"உணர்தற்கு அரியதோர் சோதியானை" - அப்பர்
"பண்டேமிக நான்செய்த பாக்கியத்தால்
பரஞ்சோதி நின் நாமம் பயிலப்பெற்றேன்" - சுந்தரர்
"சோதியே சுடரே சூழொளி விளக்கே" - மாணிக்கவாசகர்
"சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுட் சோதி" - திருமாளிகைத்தேவர்
"மாணிக்கத்துள்ளே மரகதச் சோதியாய்" - திருமூலர்
"தழற்கொண்ட சோதிச் செம்மேனி எம்மானை" - காரைக்கால் அம்மையார்
"சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி" - சேக்கிழார்
"அருட்சோதி தெய்வமெனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்" - வள்ளலார்

சோதி - ஜோதி - ஒளி. ஒளிமயமான லிங்கம் ஜோதிலிங்கம். சிவபெருமான் சோதியாக வெளிப்பட்டு லிங்கத்திலே ஐக்கியமானதே ஜோதிலிங்கம் ஆகும்.

உயர்ந்த ஆன்மிக நிலையை அடைந்தவர்கள் புவியைத் துளைத்துக் கிளம்பும் தீப்பிழம்பாக ஜோதிலிங்கத்தைக் காண்பர் என்பது நம்பிக்கை. மகரிஷிகள், தவவலிமையும் சிவஅநுக்கிரகமும் கொண்ட ஆன்மிகவாதிகள் முதலில் அறுபத்துநான்கு ஜோதிலிங்கங்கள் இருந்ததாகக் கருதினர். இறுதியில் பன்னிரண்டு ஜோதிலிங்கங்களை மட்டும் மங்களகரமானதாகவும் புனிதமான தெய்வீகத் தன்மை கொண்டவையாகவும் சக்தி வாய்ந்தவையாகவும் கருதித் தேர்ந்தெடுத்தனர்.

ஆகாயத்தில் பிரகாசிக்கும் நட்சத்திரங்கள், கிரகங்களிலிருந்து நிரந்தரமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் மின்தொடர்பு போன்ற அலைகளுடன், சோதியுடன் ஜோதிலிங்கங்கள் இணைதல் ஏற்படுத்துகின்றன. அதனால், இந்த லிங்கங்களுக்கு யந்திரப் பிரதிட்டையோ, புராண பிரதிஷ்டையோ இல்லாவிடினும் ஜோதி சக்தியை அவை வெளிப்படுத்திக்கொண்டேயிருக்கும். ஆகவே, இந்த ஜோதி லிங்கங்களைத் தொட்டாலும் தரிசித்தாலும் புண்ணிய பலன்களும் ஆனந்தமான அநுபவமும் பத்தர்களுக்குக் கிடைக்கும்.

லிங்கம் என்பது சிவனின் அருவுருவமான தோற்றமாகும். லிங்கத்தின் மேற்பாகம் சிவனாகவும் ஆவுடையார் சக்தியாகவும் கருதப்படுகிறது. அதனால், லிங்கம் சிவசக்தி வடிவமாகும். ஜோதி லிங்கங்களுக்கும் மற்றைய லிங்கங்களுக்கும் உருவத்தில் வேறுபாடில்லை.

இந்தியாவில் இராமேசுவரத்திலிருந்து இமயம் வரை நான்கு திசைகளிலும் இவை இருக்கின்றன. பாரததேசம் புனிதமான, உன்னத ஆன்மிக இடத்தை அடையவும் பத்திமார்க்கம் செழிக்கவும் ஜோதிலிங்கங்கள் அங்கு இருப்பதே காரணம்.

பன்னிரண்டு ஜோதி லிங்கங்கள் இருக்கும் இடத்தையும் அந்த லிங்கங்களின் நாமத்தையும் தெரிவிக்கும் பாடல் கீழே உள்ளது:

**இராமலிங்கம் இராமநாதா வணக்கம்**
**பீமாசங்கரம் பீமாசங்கரா வணக்கம்**
**திரியம்பகம் திரியம்பகேசா வணக்கம்**
**குங்குமனேசுரம் குங்குமனேசுரா வணக்கம்**
**நாகநாதம் நாகநாதரீசுரா வணக்கம்**
**வயித்தியநாதம் வயித்தீசுரா வணக்கம்**
**சோமநாதம் சோமநாதா வணக்கம்**
**ஓங்காரம் ஓங்காரீசுரா வணக்கம்**
**உஜ்ஜயினி மகாகாளரே வணக்கம்**
**கேதாரநாதம் கேதாரீசுவரா வணக்கம்**
**காசி விசுவநாதா வணக்கம்**
**ஸ்ரீசைலம் மல்லிகார்ச்சுனரே வணக்கம்**
**பன்னிரு ஜோதிலிங்கப் பரனே வணக்கம்.**

இவற்றுள் இராமேசுவரம், ஸ்ரீசைலம், கேதாரம் ஆகிய மூன்று தலங்களுமே பாடல்பெற்ற தலங்கள். ஸ்ரீசைலம் மூவராலும் பாடப்பட்ட தலம். இராமேசுவரம் சம்பந்தராலும் அப்பராலும் பாடப்பட்ட தலம். கேதாரம் சுந்தரரும் சம்பந்தரும் பாடிய தலம்.

ஜோதிலிங்கத் தலங்கள் மலையிலும் நதிக்கரையிலும் கடற்கரையிலும் ஊரின் நடுவிலும் இருக்கின்றன.

| | |
|---|---|
| **தமிழ்நாடு** | **இராமேசுவரம்** |
| **மஹாராஷ்டிரம்** | **பீமசாகரம்** |
| | **திரியம்பகம்** |
| | **குங்குமனேசுவரம்** |
| | **நாகநாதம்** |
| | **வயித்தியநாதம்** |
| **குஜராத்** | **சோமநாதம்** |
| **மத்தியப் பிரதேசம்** | **ஓங்காரம்** |
| | **உஜ்ஜயினி** |
| **உத்தரப்பிரதேசம்** | **கேதாரம்** |
| | **காசி** |
| **ஆந்திரப்பிரதேசம்** | **ஸ்ரீசைலம்** |

மஹாராஷ்டிரத்தில் ஐந்து ஜோதி லிங்கங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் ஒரேயொரு லிங்கம் மட்டுமே உள்ளது. அருகிலுள்ள ஆந்தராவிலும் ஒன்றே ஒன்றுதான். ஒருமுறை திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் கூறியது இப்போது எனக்கு நினைவில் வருகிறது. ஓர் ஊரில் பல காவல் நிலையங்கள் இருந்தால், அந்த ஊரில் கள்ளர்கள் அதிகம் என்றுதானே பொருள்? அதுபோல பல கோயில்கள் ஓர் ஊரில் இருந்தால் அங்கு பாவிகளும் நிறைய இருக்கிறார்கள் என்று கொள்ளலாம் அல்லவா?

திருவாதிரை நட்சத்திரத்தில் இறைவன் ஜோதிலிங்கமாகத் தோன்றிக் காட்சிகொடுத்ததாக ஐதீகம். அதனால் திருவாதிரை நாள் ஜோதிலிங்கம் வழிபடுவதற்கு மிகவும் உகந்த நாளெனக் கொள்ளலாம்.

கலசத்தில் இதுவரை வெளிவராத ஜோதிலிங்க யாத்திரைக் கட்டுரைகளை இனி எழுதவுள்ளேன்.



# நாற்பதை எப்படிக் கொண்டாடலாம்?

**1977 - 2017**

அன்புடையீர் வணக்கம். சங்கம் தனது நிறைவான சேவையில் நாற்பது ஆண்டுகளை எட்டியுள்ளது. இறையருளாலும் உங்கள் ஆதரவாலும் தொடரும் எங்கள் பணிகள் மேலும் சிறக்க நீங்கள் துணையிருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த வளர்ச்சி எங்களை எமது பணிகளின் எல்லாத் துறைகளிலும் மேலும் ஆர்வத்துடன் ஈடுபட ஓர் உந்து சக்தியாகவும் அமைகின்றது. நாற்பது ஆண்டுகளின் நிறைவை பல வழிகளிலும் சிறப்பிக்க எண்ணியுள்ளோம். இதன் ஓர் அங்கமாக இலங்கையில் வறுமையின் காரணமாகத் திருமண வயதை அடைந்தும் மண வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியாமல் திண்டாடும் நாற்பது மணமக்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் பாரியத் திட்டத்தை நாம் மேற்கொள்கிறோம். இந்த மனித நேயப் பணியில் நீங்கள் இணைந்து நாற்பது திருமணங்களை நடத்தி அவர்களின் குடும்ப வாழ்வை ஆரம்பித்து வைக்க நல்லதொரு துணைசெய்து கொடுக்க வாருங்களென அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமணச் செலவு**

| | |
|---|---|
| தாலி அரைப் பவுண் | ரூபா 25,000.00 |
| கூறைச் சேலை | ரூபா 10,000.00 |
| பட்டு வேட்டி சால்வை | ரூபா 5,000.00 |
| எழுத்து மோதிரங்கள் (2) | ரூபா 30,000.00 |
| திருமணச் செலவுக்கு | ரூபா 10,000.00 |
| வீட்டுப் பாவனைக் பொருட்களுக்கு | ரூபா 15,000.00 |
| மொத்தச் செலவு | ரூபா 95,000.00 |

**நாளைய கனவை நனவாக்கும் நாற்பது**

**The best preparation for tomorrow is doing our best today**

தொடர்பு: வாமன் 07958 142288/ சேகர் 07872 144794/ நிரஞ்சன் 07876 404354



# சிவயோகம்
# SIVAYOGAM

(Charity Reg No: 1050398 Since: 1995)

To facilitate here and beyond



## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

# பௌர்ணமிப் பூசை PURNIMA POOJA

| மூல அம்மன் | எழுந்தருளி அம்மன் |
|---|---|
| **காலை** | **மாலை** |
| 9.30 மணிக்கு - சங்கல்பம் | 5.00 மணிக்கு - அபிசேகம் |
| 10.00 மணிக்கு - சிறப்பு அபிசேகம் | 6.30 மணிக்கு - ஸ்ரீ சக்ர பூசை |
| 12.00 மணிக்கு - சிறப்புப் பூசை | 7.30 மணிக்கு - சிறப்புப் பூசை (தங்க ரதம்) |

## 11 வகையான அபிசேகப் பொருட்கள் மற்றும் பலன்கள்

| | |
|---|---|
| 1. மஞ்சட் பொடி | - லட்சுமி கடாக்ஷம் ஏற்படும், மனம் நிம்மதி பெறும், திருமணம் நடைபெறும். |
| 2. திருமஞ்சனப் பொடி | - அரசாங்கம் சம்பந்தமாக உள்ள செயல்கள் வெற்றி அடையும், நல்ல வேலை கிடைக்கும், வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும். |
| 3. பச்சரிசி மா | - கடன் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும். |
| 4. பஞ்சாமிருதம் | - குடும்பங்களில் ஒற்றுமை ஏற்படும் |
| 5. தேன் | - கல்வி, ஞானம், நல்ல சிந்தனை ஏற்படும். |
| 6. பால் (சகஸ்ர தாரை) | - நவகிரஹ தோஷங்கள் குறையும், பாபங்கள் குறையும், நீண்ட ஆயுள் தரும். |
| 7. தயிர் | - தோஷங்கள் நீங்கி குழந்தைப் பேறு உண்டாகும். |
| 8. பழச்சாறு | - எதிரிகள் மனம் மாறுவார்கள், கண் திருஷ்டிகள் குறையும், கெட்ட கனவுகள் வருவது குறையும் |
| 9. இளநீர் | - நோய்கள் குணமாகும், ஆரோக்கியமான வாழ்வு உண்டாகும். |
| 10. சந்தனம் | - செல்வச் செழிப்பு ஏற்படும், பேர், புகழ் ஏற்படும். |
| 11. பன்னீர் | - தெய்வ சிந்தனை ஏற்படும், வேண்டும் நல்ல காரியங்கள் நிறைவேறும். |
| கும்ப அபிஷேகம் | - 16 வகையான செல்வங்கள் வந்து சேரும். |

## 2016 பௌர்ணமித் தினங்கள் / 2016 PURNIMA DAYS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19/07/2016 | Tuesday | ஆடி | 11/01/2017 | Wednesday | தை |
| 17/08/2016 | Wednesday | ஆவணி | 10/02/2017 | Friday | மாசி |
| 16/09/2016 | Friday | புரட்டாதி | 12/03/2017 | Sunday | பங்குனி |
| 15/10/2016 | Saturday | புரட்டாதி | 10/04/2017 | Monday | சித்திரை |
| 14/11/2016 | Monday | ஐப்பசி | 10/05/2017 | Wednesday | வைகாசி |
| 13/12/2016 | Tuesday | கார்த்திகை | 08/06/2017 | Thursday | ஆனி |

**காலைப் பூசை குடும்பத்திற்கு £10 - Morning pooja per family £10**

**மாலை தனி பூசை உபயம் £150**

**பௌர்ணமிப் பூசைகளில் கலந்து கொண்டு அம்மன் அருள் பெற வேண்டுகிறோம்.**

**Temple Phone Number: 020 8767 9881**


Banana Leaf
taste with tradition
அனைத்து விழாக்களுக்கும் உணவு,
பலகார வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
Tel: 020 8554 4120
Mob: 07969 972 202
Web: www.bananaleafuk.com
Email: info@bananaleafuk.com
4 Central Parade, Ley Street, Ilford , Essex IG2 7DE
We do cater for :
Wedding
Puberty Ceremony
Birthday &
Arangetram Etc.


Veena's
CASH & CARRY
Quality! Variety!! Satisfaction!!!
Veena's
at
BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com

# ANNA DHANAM

# Out Reach Projects - Sri Lanka – Dec'16

**Anna Dhanam provided for the elders at Selvanagr in Vanni during December '16 full-moon day.**

About 120 elders displaced to Selvanagar after the war. They are living under the poverty line and are struggling to manage their day to day life. For the first time we were able to introduce the **"Meals on Wheels"** concept in Vanni. This activity was co-ordinated with the Government Agent.






We were the first organisation who recognised these elders situation and provided Anna Dhanam.



Our thanks to the yoga team for their commitment in serving these hungry stomachs..

Special Projects News
email: smsukyoga@gmail.com or mobile: 07770 470527



Our thanks go to KM Foundation for their invaluable support on the ground......



Our special thanks to


**Ms Vithiya Chellappah for her contribution in serving these hungry stomachs..**

**Meals on Wheels in Vanni......**

In respecting the elders who are in need, we would want to feed them with nutritious vegetarian meal at least once a month on every full moon day during 2016.



**Our aim is to serve at least 2,500 meals to hungry stomachs during 2016; that are in need of the basic necessities in life. Up to now we have served over 3,850 nutritious vegetarian meals and reached the target set for this year well on time with your help...**




**How many of you would want to be part of this mission in feeding the hungry people in the world???**

Special Projects News
email: smsukyoga@gmail.com or mobile: 07770 470527

# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Adult Services 01708 850555

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Children Services 01708 851189

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
Adult Services 01708 856592


**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
Domicilary Care 0203 200 1047

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
LONDON - UK
SEISHINKAN
GOSHIN ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do
NEW YORK - USA
Tel: 001 917 667 0739
Email: oikddojo@aol.com
www.isshinryukarate.com
M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do
LONDON - UK
0044 07958 010 139
Email: goshinissinryukarate@gmail.com
www.goshinisshinryukarate.com
Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139


HOWEVER YOU SMILE
SMILE WITH CONFIDENCE
Come to Bluebell for..
INVISIBLE TOOTH STRAIGHTENING
GUM DISEASE TREATMENT
COSMETIC DENTISTRY
SMILE MAKEOVERS
GENERAL DENTISTRY
ORAL SURGERY & IMPLANTS
ENDODONTICS
CHILDREN'S ORAL HEALTH
EMERGENCY APPOINTMENTS
FACIAL REJUVENATION
Book your FREE consultation today!
Bluebell is a TOP DIAMOND STATUS Invisalign provider.
If you have teeth that stick out, are crooked, have gaps or overlap then Invisalign is the best choice for you with clear, almost invisible braces.
Dr Suki Kanagasabai-Shakthi is one of the leading Invisalign® dentists in the UK. With her unique approach to an ethical and non-evasive path of treatment she has become an Invisalign® Diamond Status Provider, a title which is only held by a privileged few dentists in the UK.
Bluebell®
Dental Practice and Clinic
www.bluebelldp.co.uk
Tel: 020 8500 6789
140 Tomswood Hill,
Chigwell, Essex IG6 2QP
invisalign
DIAMOND PROVIDER
0% FINANCE AVAILABLE
You Tube

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

**ஜனவரி (14–01-2017) தொடக்கம் ஏப்பிரல்(22-04-2017) வரை**

| | | |
|---|---|---|
| *14.01.2017* | சனி | தைப்பொங்கல் |
| *27.01.2017* | வெள்ளி | தை அமாவாசை |
| *09.02.2017* | வியாழன் | தைப்பூசம் |
| *25.02.2017* | சனி | மகாசிவராத்திரி |
| *11.03.2017* | சனி | நடேசர் அபிஷேகம் |
| *06.04.2017* | வியாழன் | யோகர் சுவாமி குருபூசை |
| *12-04-2017* | புதன் | காரைக்கால் அம்மையார் குருபூசை |
| *14.04.2017* | வெள்ளி | ஏவிளம்பி வருடப்பிறப்பு |
| *20.04.2017* | வியாழன் | நடேசர் அபிஷேகம் |
| *22.04.2017* | சனி | திருநாவுக்கரசர் குருபூசை |

ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.

**வெள்ளிதோறும் மாலை 8.30 மணிக்கு பெரியபுராணச் சொற்பொழிவு ஆலயத்தில் நடைபெறுகிறது**

தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

# முந்திவந்த காதைப் பிந்திவந்த கொம்பு மறைத்ததா?

- வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறீக்கந்தராசா -

மூவர் முதலிகள் பாடி அருளிய தேவாரப் பாடல்களைத் துருவிப் பார்த்தபோது, "முந்திவந்த காதைப் பிந்திவந்த கொம்பு மறைத்தது" என்ற முதுமொழி நினைவுக்கு வந்தது. முருகன்தான் தமிழரின் முழுமுதற்கடவுள் என்பதும் நினைவில் நிழலாடியது.

தொல்காப்பியம் என்ற தமிழ் இலக்கணநூல்தான் மிகமிகப் பழமையான தமிழ்நூல் என்று சொல்லப்படுகின்றது. தமிழர், நிலத்தை நான்கு வகையாகப் பிரித்து, அவற்றை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று அழைத்தார்கள் என்றும், அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு தெய்வம் காவல் தெய்வமாக உண்டு என்று எண்ணினார்கள் என்றும் தொல்காப்பியம் சொல்கிறது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் வருகின்ற அகத்திணை இயல் என்ற பகுதியில் உள்ள ஐந்தாவது சூத்திரம் பின்வருமாறு:-

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"**

அதாவது காடும் காடுசார்ந்த நிலமுமாகிய முல்லை நிலத்துக்கு மாயோன் (கண்ணன்) தெய்வம். மலையும் மலைசார்ந்த நிலமுமாகிய குறிஞ்சி நிலத்துக்குச் சேயோன் (முருகன்) தெய்வம். நீரும் நீர்சூழ்ந்த பகுதியுமாகிய மருதநிலத்துக்கு வேந்தன் எனப்பட்ட இந்திரன் தெய்வம். கடலும் கடல்சார்ந்த நிலமுமாகிய நெய்தல் நிலத்துக்கு வருணன் தெய்வம்.

அதாவது தொல்காப்பியம், கண்ணன், முருகன், இந்திரன், வருணன் என்று நான்கு கடவுளரையே குறிப்பிடுகின்றது. சிவன் பற்றிய குறிப்பு எதுவும் தொல்காப்பியத்தில் இல்லை. சிவன்பற்றிய குறிப்பு, நான்கு வேதங்களில் ஒன்றிலேதானும் இல்லை. வேதம் குறிப்பிடுவது உருத்திரன் என்று ஒரு தெய்வத்தை.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்று சொல்லப்படுகின்ற சங்க இலக்கியங்களிலேகூடச் சிவன் என்ற சொல் பயிலப்படவில்லை. சங்க இலக்கியங்களுள் காலத்தால் பிற்பட்ட இலக்கியங்கள் மூன்று. கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை என்ற மூன்று இலக்கியங்களும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை எனப்படும் தொகை நூல்களில் அடக்கப்பட்டிருப்பினும், அந்த மூன்றும் காலத்தால் பிந்தியவை. கி.பி. இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டளவில் அல்லது அதன் பின்னர் எழுந்த இலக்கியங்கள் இவற்றுள் சமயநூல் என்று சொல்லத்தக்கநூல் திருமுருகாற்றுப்படை என்ற ஒன்றே. இந்த நூல் முருகனைப் பற்றியும், அவன் உறைகின்ற ஆறுகோயில்கள் பற்றியும், கூறி, அருட்பரிசு பெறவிரும்பும் அடியார்களை அந்த ஆறு கோயில்களுக்கும் போய்ப் பரிசைப் பெறும்படி ஆற்றுப்படுத்துகின்ற நூல்; அதாவது முருகக் கடவுளிடம் போய் அருட்செல்வம் பெறும்படி ஆற்றுப்படுத்துகின்ற நூல். ஆற்றுப்படுத்துகின்ற செயலுக்கு ஆற்றுப்படை என்பது பெயர். உடுப்பது உடை; எடுப்பது எடை; கொடுப்பது கொடை

என்றாற்போல் ஆற்றுப்படுத்தல் என்றால் வழிப்படுத்தல் என்பது பொருள். கூத்தரைக் கொடைவள்ளல் ஒருவனிடம் ஆற்றுப்படுத்துகின்ற சங்கநூல் கூத்தராற்றுப்படை என்ற பெயர் பெற்றது. சிறியபாணரைப் பெரும் வள்ளலான அரசனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்த நூல் சிறுபாணாற்றுப்படை. பெரியபாணரைப் பெருங்கொடையாளியிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்த நூல் பெரும்பாணாற்றுப்படை. இவ்வாறே பக்தர்களை முருகக்கடவுளிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்த நூல் திருமுருகாற்றுப்படை. இந்த ஆற்றுப்படை என்ற தொடரைப் புரிந்து கொள்ளாதவர்கள், முருகனுக்குச் சண்டை போடுவதே தொழில் என்றாற் போலவும் அதற்காக அவன் ஆறுபடைவீடுகளை (Military Camps) வைத்திருந்தான் என்றால் போலவும் திருப்பரங்குன்றம், திருச்செந்தில் என்ற திருச்செந்தூர், பழநி, திருவேரகம், பழமுதிர்சோலை ஆகிய கோயில்கள் அத்தகைய போர்ப்படைமுகாங்கள் என்றாற் போலவும் சிலர் தவறாகப்புரிந்து கொள்கிறார்கள்.

திருமுருகாற்றுப்படை என்ற நூல் பத்துப்பாட்டில் ஒன்றென்று கூறினும், அதிலே, வடநாட்டுப் புராணக்கதைகள் பல நுழைந்துவிட்டன. வடநாட்டுக் கார்த்திகேயனும், சுப்பிரமணியனும் தமிழ்நாட்டு முருகனும் ஒருவரல்லர். ஆனால் தமிழ்நாட்டுக்குள் நுழைந்த வடவர், அப்படியான ஒரு இடியப்ப முடிச்சைப் போட்டுக் குழப்பிவிட்டார்கள். அப்படியான ஒரு குழப்பம் திருமுருகாற்றுப்படையில் இருப்பதால், அந்த நூலை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு, அதற்கு முந்திய சங்க இலக்கியங்களில் முருகன் பற்றிய குறிப்புக்கள் உண்டா என்று பார்ப்போம்.

**1 மலைபடுகடாம் என்ற பத்துப்பாட்டு நூலிலே வருகின்ற வெல்போர்ச்சேய் என்ற தொடர் முருகனைக் குறிக்கின்ற ஒரு தொடர்.**

**2 பெரும்பாணாற்றுப்படையின் 75ஆவது வரியில் வருகின்ற கூம்பமர் நெடுவேள் என்ற தொடர் முருகனைக் குறிக்கின்றது.**

**3 புறநானூற்றின் 125ஆம் பாடல் முருகனைத் திருத்தகுசேஎய் என்று விவரிக்கின்றது.**

**4 புறநானூற்றின் 12ஆம் பாடல் செருவெஞ்சேய் என்று முருகனைக் குறிக்கின்றது.**

**5 அகநானூற்றின் 266ஆம் பாடல் செருமிகு சேய் என்று குறிப்பது முருகனையே.**

**6 புறநானூற்றின் 14ஆம் பாடலும் முருகனைச் செருமிகுசேய் என்றே குறிக்கின்றது.**

**7 அகநானூற்றின் 299ஆம் பாடலில் அணங்குடைமுருகன் கோட்டத்து என்ற ஒரு தொடர் வருகின்றது.**

மேற்படி தொடர்களைப் பார்க்கின்ற போது சங்ககாலத் தமிழர் முருகனையே கடவுளாகப் பேணிப் போற்றினார்கள் என்று எண்ண வேண்டியிருக்கிறது.
முருகனைப்பற்றிப் பேசுகின்ற சங்க இலக்கியம், விநாயகர் என்ற பிள்ளையாரைப் பற்றிய குறிப்பு எதனையும் தரவில்லை என்பது மனம் கொள்ள வேண்டிய ஒன்று.

தொல்காப்பியத்திலோ, மேலே நாம் காட்டிய ஏனைய சங்க இலக்கிய நூல்களிலோ சிவன் அல்லது சிவபெருமான் என்ற தொடர் எங்குமே காணப்படவில்லை என்பது சிந்தனைக்கு உரியது. நானிலங்களுக்குமான தெய்வங்களை வரிசைப்படுத்திக் கூறிய தொல்காப்பியர், சிவனை எந்த நிலத்துக்கும் உரியவனாகக் காட்டாதது ஏன் என்பது சிந்தனையைத் தூண்டுகின்ற ஒன்று.
தொல்காப்பியம் குறிப்பிடாத சிவனைக் குறிக்கின்ற தொடர்கள் என்று ஊகிக்கக்கூடிய சில தொடர்கள் சங்க இலக்கியங்கள் சிலவற்றில் உள்ளன. ஆங்கும் சிவன் என்ற சொல் குறிப்பிடப்படவில்லை என்பது மனம் கொள்ளவேண்டிய ஒன்று.

**1 புறநானூற்றின் ஆறாம்பாடலில் முக்கட் செல்வர் என்று ஒரு தொடர் வருகின்றது.**
**2 புறநானூற்றின் 55ஆம் பாடலில் பிறைநுதல் விளங்குமொருவன் என்று ஒரு தொடர் வருகின்றது.**
**3 புறநானூற்றின் 91ஆம் பாடலில் பால்புரை பிறைநுதற்பொலிந்த சென்னி நீலமணிமிடற்றொருவன் என்ற அடிகள் வருகின்றன.**
**4 புறநானூறு 166ஆம் பாடலில் நன்றாய்ந்த நீள்நிமிர்சடை முது முதல்வன் என்ற அடிகள் வருகின்றன.**

மேற்படி தொடர்கள் சிவனைப்பற்றிய குறிப்புகளாகஇருக்கலாம் என்பது அறிஞர்களின் கருத்து. மேற்படி குறிப்புக்கள் எல்லாம் புறநானூற்றிலே கூறப்பட்ட குறிப்புக்கள்.
நற்றிணை என்ற எட்டுத்தொகை நூலிலே சிவனைப்பற்றிய குறிப்பு எதையும் காணமுடியவில்லை.

எட்டுத்தொகையை விட்டுவிட்டால், பத்துப்பாட்டில் நாலோ ஐந்து இடங்களில் சிவன் என்று பெயர் சொல்லாத சிவனைப்பற்றிய குறிப்புக்கள் சில வருகின்றன. மதுரைக்காஞ்சி என்ற இலக்கியம் ஐம்பூதங்களைப் படைத்தவன் என்ற ஒரு செய்தியைத் தருகின்றது. அதே மதுரைக் காஞ்சி மழுவை உடையவன் என்ற ஒரு செய்தியைத் தருகின்றது. நஞ்சை உணவாகக் கொண்டவன் என்று ஒரு கடவுளைப் பற்றி மலைபடுகடாம் பேசுகின்றது.
பத்துப்பாட்டில் ஒன்றான திருமுருகாற்றுப்படை முருகன் புகழ்பாடவென்றே எழுந்த பிற்கால நூல். அந்த நூல், சிவனைக் குறிக்கப் பின்வரும் தொடர்களைப் பயன்படுத்தியுள்ளது என்று கொள்ளலாம்.

**1 இடபக் கொடியை உடையவன்**
**2. உமையாளை ஒருபக்கத்தில் கொண்டிருக்கிறான்**
**3 இமையாத முக்கண்களை உடையவன்**
**4 மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வன்**
**5 ஆல் கெழுகடவுள்.**

திருமுருகாற்றுப்படையில் விட்டுணு, சிவன், இந்திரன் என்போர் தேவர்களாகக் குறிக்கப்பட்டுள்ளனர். முருகன், சிவனுடைய பிள்ளை என்ற குறிப்புத் திருமுருகாற்றுப்படையில் இல்லை.

இவற்றையெல்லாம் நோக்குகின்றபோது, முருகனும், மாயோனும் தமிழரிடையே பெற்றிருந்த செல்வாக்கைச் சிவன் என்ற கடவுள் பெற்றிருக்கவில்லை என்று எண்ண வேண்டியிருக்கிறது.
சங்ககாலத்தின் பிற்பகுதியில் வடநாட்டுப் புராணக் கருத்துக்கள் பல தமிழ்நாட்டிற்குள் நுழைந்தன. ஆரியத் தெய்வங்களோடு தமிழ் நாட்டுத் தெய்வங்களை ஒன்று சேர்த்துப் பார்க்கின்ற நிலைமை ஒன்று தோன்றியது அதாவது குழப்பநிலை ஒன்று தோன்றியது. முருகனும், கந்தனும், சுப்பிர மணியனும் ஒருவரே என்ற ஒருநிலை தோற்றுவிக்கப்பட்டது. மாயோனும் விட்டுணுவும் ஒருவரே என்ற ஒரு குழப்ப நிலை தோற்றுவிக்கப்பட்டது. சிலப்பதிகார காலத்துக்குப் பின்னர், தொல்காப்பியர் குறிப்பிட்ட வருணனும், வேந்தனும், மாயோனும் எப்படியோ மறைந்து போகிறார்கள். எப்படி மறைந்தார்கள் என்று புரியவில்லை?

நெய்தல் நிலத்துக்குரிய வலைஞரால் வழிபடப் பட்ட வருணனும், வடநாட்டினரின் அக்கினி வழிபாட்டு நெறிக்குரிய வருணனும் ஒருவரே என்ற மாயை தோற்றுவிக்கப்பட்டுக் குழப்பம் ஏற்படுத்தப்பட்டவுடனும், தமிழரின் நெய்தல் நிலத்தெய்வமான வருணனும் மறைந்து போகிறான்.

தமிழரின் மருதநிலத் தெய்வமான வேந்தன் என்ற இந்திரன் மட்டும் அவனுக்குரிய வாகனமாகிய யானையின் தலையைத் தனக்குரியதாக்கிக் கொண்டு, விநாயகர் என்ற பெயரோடு யானைத் தலையோடு தமிழ்நாட்டில் நடமாடத் தொடங்குகிறான் என்று எழுதுகிறார் பி.டி. சீனிவாசஜயங்கார் என்ற வரலாற்று ஆசிரியர். நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் முருகனும் தமது கடவுள் நிலையை இழந்து வருகிறார் என்பதையே தேவாரங்கள் காட்டுகின்றன. அதாவது பழைய இலக்கணமான தொல்காப்பியத்திலும் ஏனைய சங்க இலக்கியங்களிலும் தெய்வநிலையில் வைக்கப்பட்டிருந்த முருகன்பற்றிய தெய்வ நிலை மறைந்து போக, அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குறிப்பிடப்பட்டிருந்த சிவன், தமிழரின் முழுமுதற் தெய்வமாக மிளிரத் தொடங்குகின்ற ஒரு நிலையைத் தேவாரங்களில் பார்க்கின்றோம். அதாவது, முந்திவந்த காதான முருகன் மறக்கவும் மறைக்கவும்பட்டுப்போகப், பிந்திவந்த கொம்பும், கொம்பனுமான சிவன், முருகனின் முன்னிடத்தைப் பின்னுக்குத் தள்ளுகின்ற நிலையைப் பார்க்கின்றோம்.

திருமுருகாற்றுப்படை தோன்றியகாலத்துக்கும் திருஞானசம்பந்தர் தோன்றிய காலத்துக்கும் இடையில் முந்நூறு ஆண்டுகள் கடந்திருக்குமோ என்பது சந்தேகமே. எனினும் அந்த முந்நூறு ஆண்டுகளுக்குள் முருகன் மறைந்தது எப்படி? சிவன் சிம்மாசனம் ஏறியது எப்படி? முருகனும், மாயோனும் மறைந்து போகின்ற காலப் பகுதியில் (நான்காம் ஐந்தாம் நூற்றாண்டளவில்) வாழ்ந்த காரைக்கால் அம்மையார் அதுவரை காலமும் அதிகம் பறையப்படாமலிருந்த சிவனுக்கு முதன்மை கொடுத்துப் பாடியதேன்? முருகனையோ, பிள்ளையாரையோ மூவர் முதலிகள் தெய்வங்களாகச் சுட்டாதது ஏன்? இவையெல்லாம் சிக்கலான, சிந்தனைக்குரிய கேள்விகள்.

எண்ணாயிரத்துக்கு மேற்பட்ட தேவாரங்கள் உள்ளன. அவற்றைப் பாடியவர்கள் அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்ற மூவர். அவர்கள் மூவராலும் பாடப்பட்ட தெய்வம் சிவன் ஒருவனே. அந்த மூவர் வாழ்ந்த காலத்தில் அவர்கள்தொழுத கோயில்கள் எல்லாமே சிவன் கோயில்கள் தாம். ஏன்? அவர்களுடைய காலத்தில் முருகனுக்கென்று கோயில்கள் இருக்கவில்லையா? திருமுருகாற்றுப் படையில் பறையப்பட்ட பழம் பெரும் ஆற்றுப்படைக் கோயில்கள் எங்கே போயின? மாயோனுக்கென்று கோயில்கள் இருக்கவில்லையா? இவையெல்லாம் சிந்திக்க வேண்டிய கேள்விகள்.

தேவார முதலிகள் தேவாரங்களில் பிள்ளையார், முருகன் ஆகியோர் பற்றிய சிறு சிறு குறிப்புக்கள் உண்டு. ஆனால் அந்தக் குறிப்புக்கள், பிள்ளையாரையும் முருகனையும் தெய்வங்களாகக் குறிக்கவில்லை; மூர்த்தங்களாகவே குறிக்கின்றன. பிடியதன் உருஉமை கொள என்ற தேவாரம் மேற்படி கூற்றுக்குச் சான்று. முருகன், பிள்ளையார் பற்றிய குறிப்புக்கள் ஏறத்தாழ 57உக்கு மேற்பட்ட தேவாரங்களில் வருகின்றன. அக்கறை உள்ள வாசகர்களுக்குப் பயன்தரக்கூடும் என்று கருதி, அந்தத் தேவாரப் பாக்களின் எண்ணையும் சம்பந்தப்பட்ட பாடலின் முதல் வரியையும் கீழே தருகிறேன்.

விநாயகர் பற்றிய குறிப்புக்கள் பின்வரும் தேவாரப் பாடல்களில் இடம் பெறுகின்றன:-

***1239-* சந்தநல்மலரணி தாழ்சடையான்**
***1330-* பிடியதன்உருஉமைகொளமிகுகரியது**
***1364-* செற்றிட்டே வெற்றிச்சேர்**
***2509-* கரியின் மாமுகனுடைய கணபதிதாதை**
***4173-* பலபல காமத்தராகிப் பதைத்தெழுவார்**
***5889-* நாரணன்னொடு நான்முகன்**

*6379-* **கோவாய இந்திரனுள்ளிட்டாராக**
*6776-* **கைவேழ முகத்தானைப் படைத்தார் போலும்**
*6983-* **தக்கனது வேள்வி கெடச் சாடினானை**
*7015-* **பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்**
*7267-* **திங்கள் தங்கு சடையின் மேல்**
*7699-* **மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி**

முருகன்பற்றிய குறிப்புகள் பின்வரும் தேவாரப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன:-

*128-* அருகரொடு புத்தரவர்
*1240-* தழைமயிலேறவன் தாதையோதான்
*1266-* நெருப்புரு வெள்விடை
*2135-* காயம் செவ்விக் காமன் காய்ந்து
*2151-* வள்ளி முலை தோய் குமரன்
*2256-* விளங்கிய சீர்ப் பிரமனூர்
*2273-* காய்ந்து வருகாலனை
*2411-* இடமயில் அன்னசாயல்
*2722-* நேமியானும் முகம்நான்குடைய
*3175-* ஊறினார் ஓசையுள்
*4012-* உற்றுமை சேர்வது மெய்யினையே
*4340-* ஆறு கொலாம் அவர் அங்கம்
*4583-* மாலன மாயன் தன்னை
*4589-* செல்வியைப் பாகம் கொண்டார்
*4738-* குறவிதோள் மணந்த செல்வக்குமரவேள்
*4887-* உடம்பெனும் மனையகத்துள்
*5164-* சூரட்டவேலவன் தாதையை
*5386-* முன்னையார் மயில் ஊர்தி
*5420-* நங்கடம்பனைப் பெற்றவள்
*5878-* சமரசூரபன் மாவைத்தடிந்த
*5889-* நாரணன்னொடு நான்முகன் இந்திரன்
*6063-* அடும்பும் கொன்றையும் வன்னியும்
*6296-* முக்கணா போற்றி முதல்வா போற்றி
*6297-* அரவணையான் சிந்தித்து
*6379-* கோவாய் இந்திரனுள்ளிட்டாராக
*6425-* படைமலிந்த மழுவாளும்
*6478-* கள்ளிமுது காட்டில் ஆடி
*6666-* மிறைபடும் இவ் உடல்வாழ்வை
*6774-* சமரம் மிகு சலந்தரன் போர்வேண்டி
*6778-* மாலாலும் அறிவரிய வரதர்போலும்
*6902-* முந்தைகாண் மூவரினும் முதலானான்
*6983-* தக்கனது வேள்விகெட
*6993-* காரிலங்கு திருவுருவத்தவற்கும்
*7122-* கோழிக்கொடியோன்தன்
*7267-* திங்கள் தங்கு சடையின் மேலோர்
*7407-* குறவனார் தம்மகள் தம்மகனார் மணவாட்டி
*7614-* பொன்னானை மயிலூர்தி முருகவேள்
*7699-* மண்ணுலுகம் விண்ணுலகம் உமதே ஆட்சி
*7819-* திருத்தினை நகருறை சேந்தன் அப்பன்
*7836-* ஒட்டியாட் கொண்டு போய் ஒளித்திட்ட
*7862-* அத்தம் என்றெனை ஆளுகந்தானை
*7870-* திங்கள் நம்பி முடிமேல் அடியார்
*7884-* வேந்தராய் உலகாண்டு அறம்புரிந்து
*7918-* மறவனை அன்று பன்றிப்பின்
*7972-* நமர் பிறர் என்பது அறியேன்

மேற்படி பாடல்களில் முருகன் பற்றிய குறிப்புக்களும், முருகனுடைய மனைவிமார் பற்றிய குறிப்புக்களும், முருகனின் போராற்றல் பற்றிய குறிப்புக்களும் நிறையவே வருகின்றன. முருகன் என்பவர் சிவனின் மகனாகவே குறிப்பிடப்பட்டுள்ளார். முருகனை மூவர் முதலிகள் கடவுளாகக் கொள்ளவில்லை என்பதும், முருகனை அவர்கள் வணங்கவில்லை என்பதும், மேற்படி பாடல்களிலிருந்து தெளிவாகின்றது. இக்கூற்றுப் பிள்ளையார் என்ற கணபதிக்கும் பொருந்தும். அத்துடன் வடநாட்டுக் கருத்துகள் பல மூவர் முதலிகளின் காலத்தில் தமிழர் மத்தியில் செல்வாக்குப் பெற்று விட்டன என்பதும் துலாம்பரமாகத் தெரிகின்றது. சிந்திப்பீர்களா?


# Hinduism in search of Answers..........

**Compiled by S Atputhananthan**

**What are Mantras?**

It is a properly repeated hymn or formula used in ritual worship and meditation as an instrument for evoking the presence of a particular divinity. These were uttered at first by inspired sages, and traditionally transmitted orally from masters to disciples. A mantra may be composed of a single sound AUM, or several syllables. Each deity is represented by its own mantra. It is only by the correct enunciation of the correct mantra that the deity descends or enters the body of its image or will respond to a devotee. A mantra has great potency and represents the Supreme Being himself in the guise of sound.

**What is the purpose of reciting Mantras?**




In devotional traditions, the greatest mantras are names of gods. By constantly repeating divine name, devotee continuously remembers god. Repetition purifies body and mind and draws divine grace.

A mantra may be articulate or inarticulate, or a combination of them, as with AUM. It has an inherent power, known as "Mantra shakti", which has a positive influence not due to any philosophical meaning behind the mantra, but simply due to its utterance alone.
What is the significance of the sound AUM (OM)?
According to Hinduism, AUM is the sound of symbol for the Absolute and infinite truth – God. It is the goal of all-spiritual practices and austerities. Aum is the entire message of the Hindu scriptures. It is an eternal mystical syllable that stands for the whole universe. It encompasses the past, present and the future and goes beyond the periphery of the time



itself.

OM is not a concept, not a designation of something. It is also called ‘Pranava’. It is the ‘all word’ as Chandogya Upanishad explains. It represents the sum total of all letters of the alphabet, it embodies all things in the form of sound, it is Sabda Brahman – the supreme in the form of the world.
The chant has extra ordinary effect on humans. Aum belongs to no language or culture (Although it belongs to religious vocabulary of many eg. Amen, Amin, Omniscient, Omnipresent, Omnipotent). It is not a word but rather an intonation which, like music, transcends the barriers of age, race, culture and even species.

Sound has great power in Hinduism. In the early Vedic period, it was through the sacred hymns that the priests communicated with the God. Later some of the Puranas describe sound as the medium through which the unmanifest Brahman becomes the Cosmos.
The cosmic significance of sound can be demonstrated with the mantra AUM (OM).
It is understood as both the sound equivalent of the cosmos and the means of cosmic creation. It is the God in the form of sound. This makes AUM a means to liberation. Everything has AUM as its subtle essence.
The component of this mantra illustrates the progression of awareness from ignorance to enlightenment. The three sound constituents of Aum, represents the three material states of existence: waking, dreaming and deep sleep. The sound, ‘A’ which starts at the very base of the throat, stands for normal awareness of waking state. ‘U’ rises to be shaped by mouth, represents the inward focused dream state. ‘M’ vibrating on the lips, is the deep sleep state. These three states experienced as single seamless life are the manifested Brahman. The silence that follows represents the phase of Realisation, the fourth state the pure Consciousness of un- manifested Brahman.

“The word which all the Vedhas declare, which all the authorities proclaim, for which people live the life of religion, Student!, the word, I will tell you in brief. That is AUM.”
Kathopanishad I 2.15
Why Aum (OM)?
Brahman is not knowable by any of our human faculties. It cannot be intellectually, emotionally or physically grasped. So we need a symbol to bring us closer to realisation of the unknowable.
Sound symbols are the subtlest idols, those closest to the spiritual realm, because only one of the five senses can perceive them – the ear. At the other extreme are stone idols, which can be perceived by all five sense organs and therefore the grossest – the materially bound – idols. For this reason, verbal chanting, teaching and music have always played predominant role in vedic philosophy. Aum is the most complete utterance and therefore the best symbol for the most complete reality.
“AUM is the bow; One’s self is the arrow; the Brahman is the target; One should shoot with all attention and, like the arrow, he will become one with it” - Manduka Upanishad



**What is Gayathri Mantra?**

A popular legend has it that sage Vishvamitra, who had been in 'Thapas'(meditation) had used his body as the wick to light a divine lamp, in his quest to seek the Lord Siva. He recited this Mantra in his worship. The mantra got the name Gaya Thiri as the saint used his Gaya (body), as a Thiri (Wick). Gāyatrī is the name of the Vedic meter in which the verse is composed. The mantra is found in the Rig Veda. In the Bhagavad Gita, Lord Krishna had proclaimed to Arjuna - "Among all the mantras, I am the Gayatri".

This mantra is also known as Guru mantra, Sabita Mantra and Savititri mantra. This is used to worship the Sun God – the saviour of all and symbol of eternal peace. This mantra has magical power to ring the spiritual bells and enjoins the devout's heart and soul to the lord

OM BHUR BHUVAH SVAHAH
TAT SAVITUR VARNEYAM
BHARGO DEVASYA DHIMAHI
DHIYO YO NAH PARACHODAYAT OM

"We concentrate our minds upon the most radiant light of the Sun God, who sustains the earth, the interspace and the heavens. May the Sun God illuminate our thoughts!"
Rig Veda III 62.10

The Gayatri mantra has both an intrinsic power (ie "mantra shakti"), through its mere utterance alone, and also an instrumental power (ie "prarthana shakti"), which is derived from the understanding of its meaning and philosophical significance. Hence, the repeated and correct chanting of the Gayatri Mantra, with proper understanding of its meaning, is believed to be of the greatest good to the individual.

# தெய்வீகக் காதல்

- அநுஜா-

மனித வாழ்வில் காதல் முக்கிய இடத்தைப் பெறுகிறது. பொதுவாகக் காதல் என்னும்போது இளமைப் பருவத்தில் உள்ள ஆணும் பெண்ணும் சந்திக்கும் போது அவர்களின் உள்ளத்திலே அவர்களே அறியாது ஏற்படும் ஓர் அன்பு, உணர்வு காதலாக மலர்கிறது. அளவற்ற அன்பைக் காதல் என்று சொல்லலாம். காணத் துடிப்பது, அடையத் துடிப்பது, காணாதபோது வாடித்துவள்வது என்பவற்றை மானுடக் காதலில் காணமுடிகிறது. இதைப் போலவே அடியார்கள் இறைவனைக் காணத்துடிப்பதையும் காணதபோது ஏங்குவதையும், கண்டபோது பேரானந்தம் அடைவதையும் அந்த அடியார்கள் அருளிச்சென்ற பாடல்கள் மூலம் அறியமுடிகிறது. இதுவே தெய்வீகக் காதலாகும்.

மாணிக்கவாசகர் தன்னைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் பாவனை செய்து பாடிய பாடல்களின் தொகுப்பே திருக்கோவையார் ஆகும். கண்ணன்மேல் அளவுகடந்த காதலுடன் வாழ்ந்தவர் மீரா. அவரின் தாயார் மீரா விளையாடும் கண்ணன் பொம்மையைக் காட்டி இதுதான் உன் கணவர் என்று கூறியது அவரின் குழந்தை உள்ளத்தில் ஆழமாக வேரூன்றி, அவர் பருவமடைந்தபோது அந்த உணர்வு காதலாக மலர்ந்தது. காலமெல்லாம் கண்ணனையே தன் தலைவனாக எண்ணிப் பாடிப் பரவி வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார். இதேபோல ஆண்டாள் கண்ணன்மீது கொண்ட தீவிரமான காதலை நாச்சியார்மொழி எடுத்தியம்புகின்றது. இதனைக் கொஞ்சம் விவரிப்பது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

திருமால் மீது அளவுகடந்த பத்திகொண்டவர் பெரியாழ்வார். அவர் இறைவனுக்குச் சூட்டுவதற்கென மலர் கொய்ய நந்தவனம் சென்றார். அங்கே இருந்த துளசிச் செடியருகே ஒரு பெண்குழந்தையைக் கண்டார். அந்தக் குழந்தையை வீட்டுக்குக் கூட்டிவந்து கோதை என்று பெயரிட்டு அன்புடன் வளர்த்தார். தந்தையைப் போலவே கோதைக்கும் கண்ணனிடம் அளவற்ற பத்தி ஏற்படுகிறது. பருவமடைந்ததும் பத்தி காதலாக மலர்கிறது. கண்ணனையே மணந்துகொள்ளவேண்டும் என்று கோதை முடிவுசெய்கிறாள். தினமும் தன்னை நன்றாக அலங்காரம் செய்து தன் தந்தை கண்ணனுக்குச் சார்த்துவதற்காக வைத்த மலர்மாலையை எடுத்து, தான் அணிந்துகொண்டு கண்ணாடி முன்பு நின்றுகொண்டு தான் கண்ணனுக்கு ஏற்ற மணப்பெண்தானா என்று அழகுபார்ப்பாள். தினமும் இது நடந்தது. ஆனால், பெரியாழ்வாருக்கு எதுவுமே தெரியாது. ஒரு நாள் இந்த விடயம் அவர் கவனத்துக்கு வந்தது. கோதையை அவர் கண்டித்தார். புது மாலையொன்றைக் கட்டி எடுத்துச்சென்று கண்ணனுக்குச் சூட்டினார். அன்றிரவு கண்ணன் கனவிலே தோன்றி, கோதை அணிந்த மாலையையே தனக்குச் சூட்டவேண்டும் என்று ஆழ்வாரிடம் தெரிவித்தான். இறைவனின் அருள் பெற்றதால் கோதை ஆண்டாள் என்று அழைக்கப்பட்டார்.

ஆண்டாள் தினமும் மகிழ்வுடன் சூடி அழகுபார்த்தபின்னரே அந்த மாலை ஆண்டவனுக்குச் சூட்டப்பட்டது. ஆண்டாளின் மனத்தில் காதலும் வளர்ந்தது. கண்ணன் ஏன் இன்னும் தன்னை வந்து திருமணம் செய்யவில்லை என்று ஏங்கத் தொடங்குகிறாள் ஆண்டாள். பெண்கள் தங்கள் காதல் நிறைவேறவேண்டும் என்று விரதம் இருப்பார்கள். அதேபோல ஆண்டாளும் அந்தக்

காலத்து முறைப்படி மன்மதனை நோக்கி நோன்பு இருக்கிறாள். வேங்கடவனோடு தன்னைச் சேர்க்கும்படி மனமுருகி வேண்டுகிறாள்.

தைமாதத்தில் நிலத்தைக் கூட்டிப் பெருக்கி, கோலம்போட்டு அலங்கரித்துள்ளேன். மன்மதனே! நெருப்பைக் கக்கும் சக்கரத்தைக் கையிலேந்திய வேங்கடவனுடன் என்னைச் சேர்த்துக் காதலால் ஏற்பட்ட என் துன்பத்துக்கு ஒரு முடிவு காட்டமாட்டாயா? வாசனை பொருந்திய மலர்கள் கொண்டு காலையும் மாலையும் உன் திருவடியை வணங்குகிறேன். என்னை அந்தக் கோவிந்தனிடம் சேர்த்துவிடு. தேவர்களுக்கென்று படைத்த உணவை காட்டு மிருகங்கள் வந்து உண்பதுபோல இறைவனுக்கு என்று அர்ப்பணிக்கக் காத்திருக்கும் என்னை மானுடருக்கென்று யாரும் சொன்னால் நான் உயிர்வாழமாட்டேன் என்று மன்மதனுக்குச் சவால் விடுகிறாள்.

**ஊழியானி சங்குத் தமர்க்கென்று**
**உன்னித் தெழுந்த என் தடமுலைகள்**
**மானுடர்க்கென்று பேச்சுப்படின்**
**வாழ்கிலேன் கண்டாய் மன்மதனே**

இவ்வாறு பலவாறு அரற்றியும் புலம்பியும் பலன் கிட்டாதுபோகவே, யாரையாவது தூது விடலாமா என்று எண்ணித் தவிக்கிறாள். அவளின் கண்ணுக்குத் தெரிந்த எல்லாவற்றையும் தூது விடுகிறாள். பக்கத்திலுள்ள சோலைக் குயிலைப் பார்த்து, “குயிலே! நீ என் மாதவன் வரக் கூவுவாயானால் நான் இன்னமுதூட்டி உன்னோடு விளையாடுவேன். வேங்கடவனைக் காண ஆசைகொண்ட என் கண்கள் உறக்கமின்றி வாடுகின்றன. எனது காதலை அவனிடம் கூறி வரச்சொன்னால் உனக்கு பெரிய தருமம் செய்த பலன் கிட்டும்” என்று மன்றாடுகிறாள். குயிலின் பதில் கிடைக்காததால் உலகளந்த உத்தமனுக்கு நான் அடிமையாகிவிட்டதால் தென்றலும் சந்திரனும்கூட என்னை வருத்துகின்றன. நீயும் எனக்கு உதவாவிட்டால் உன்னை இச் சோலை யிலிருந்தே விரட்டிவிடுவேன் என்று குயிலை மிரட்டுகிறாள்.

பின்பு மேகங்களைத் தூது விடுகிறாள். “மேகங்களே! நீங்கள் மழை பொழிந்து உலகத்தைச் செழிக்கச் செய்கின்றீர்கள். எனது கண்களிலிருந்து பெருகும் கண்ணீர் மழையை நிறுத்தி எனக்கு வாழ்வளிக்கும்படி அந்த வேங்கடவனிடம் கூறுங்கள். காமத்தீ என் உடலை வருத்தி மெலி வடையச் செய்ததால் என் வளையல்கள் கழன்று விழுகின்றன. உலகைக் காக்கும் உத்தமனிடம் என்னையும் காக்கும்படி கூறுங்கள். பழுத்த எருக்கலம் இலை மரத்திலிருந்து வீழ்வதுபோல என்உயிரும் சோர்ந்துபோகிறது. என் உயிர் உடலில் தங்கும் வண்ணம் ஒரு வார்த்தை சொல்லமாட்டாயா?” எனத் தன் ஆற்றாமையைக் கூறும் ஆண்டாளின் தெய்வக் காதலை நாச்சியார் திருமொழியிலுள்ள அத்தனை பாடல்களும் அழகாகச் சித்தரிக்கின்றன. காதல் வயப்பட்ட ஒரு பெண் தன் காதல் நிறைவேற என்னவெல்லாம் செய்யவேண்டுமோ, அத்தனை யையும் செய்வாள். அதுபோல ஆண்டாளும் செய்யும் முயற்சிகளை நாச்சியார் திருமொழிப்பாடல்களில் நாம் காணமுடிகிறது.

காதல்வயப்பட்டவர்கள் கனவு காண்பது இயற்கை. ஆண்டாளும் கோவிந்தன் வந்து தன்னைத் திருமணம் செய்வதாகக் கனவு காண்கிறாள், கண்ட கனவைத் தோழியருக்கு எடுத்துரைக்கிறாள். பத்துப் பாட்டுக்களில் திருமணச் சடங்கு அத்தனையையும் அழகாக விவரிக்கிறாள் ஆண்டாள்.

தொடர்ச்சி 45ஆம் பக்கம்

# கண்ணனும் தாத்தாவும்



- முத்து -

இலண்டன் மாநகரில் மக்களின் தொகை மட்டுமல்ல, எலிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துவிட்டது. எலிகளைத் தொலைக்க மக்கள் பலவிதத்தில் முயன்றும் பலனில்லாமற் போனதால், வீட்டிலே பூனை வளர்க்க ஆரம்பித்துள்ளார்கள். இப்போது பூனைகளின் தொகை முன்பு ஒருபோதும் இல்லாத அளவு கூடியுள்ளது. பகலில் பூனைகள் வீட்டுத் தோட்டங்களில் வந்து மகிழ்ச்சியாக விளையாடும். வேலிகளின்மேலே நடந்து திரியும். கண்ணனின் வீட்டுத் தோட்டத்திலும் கறுப்பும் வெள்ளையும் கலந்த நிறமுள்ள அழகான பூனையுடன் சாம்பல் நிறப் பூனை ஒன்று விளையாடிக்கொண்டிருந்தது. கண்ணனும் தாத்தாவும் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். திடீரென அங்கே ஒரு நரி வந்தது. அது பதுங்கிப் பதுங்கிப் பூனைகளுக்குக் கிட்ட வந்தது. நரியைக் கண்டதும் சாம்பல் நிறப்பூனை கோபத்துடன் சீறிக்கொண்டு எதிர்த்தது. நரி கொஞ்சம் பின்னுக்குப் போனது. பூனைகள் இரண்டும் பூச்செடிகளுள் மறைந்து ஓடின.

கண்ணன்: நரி பூனையைக் கடித்துவிடுமோ என்று நான் பயந்துவிட்டேன் தாத்தா!

தாத்தா: ஆமாடா கண்ணா, நானுந்தான் பயந்து இந்தத் தடியை எடுத்தேன், நரியைத் துரத்த..! பூனை நரிக்குப் பயப்படாமல் அதை வெருட்டும் என்று நான் நினைத்தும் பார்க்கவில்லை என்று சொல்லியபடியே தடியை ஓங்கி நரியை விரட்டினார் தாத்தா.
(நரி ஒரே நொடியில் வேலிக்கு மேலாகப் பாய்ந்து பக்கத்து வீட்டுக் கூரைமேல் ஏறிக் கம்பீரமாக தொடராக இருந்த வீடுகளின் கூரைமேல் நடந்துபோனது. கண்ணனும் தாத்தாவும் அதை ஆச்சரியமாகப் பார்த்துக்கொண்டிருந்தனர்.)

கண்ணன்: இப்போ, நீங்கள் முன்பு ஒருகால் எனக்குச் சொல்லித்தந்த "நரியும் திராட்சைப்பழமும்" என்ற கதை ஞாபகம் வருகிறது தாத்தா. அந்தக் கதையில், நரி திராட்சையைப் பறிக்க எட்டி எட்டிப் பார்த்துவிட்டு முடியாமல் போக, "சிச்சீ இந்தப் பழம் புளிக்கும்"என்று சொல்லிவிட்டுப் போனதாகச் சொன்னீர்கள் தாத்தா. இதோ, இந்த நரியானால் மரத்தில் ஏறித் திராட்சையைத் தின்றிருக்குமே தாத்தா.

தாத்தா: ஆமாம் கண்ணா! எனக்கும் இந்த நரி இவ்வளவு வேகமாப் பாய்ந்து ஏறிப்போவதைப் பார்க்க ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

கண்ணன்: ஏன் தாத்தா, உங்கள் ஊரில் இப்படி நரி இருக்கவில்லையா?

தாத்தா: யாழ்ப்பாணத்தில், ஊருக்குள் நரிகள் உலாவியதை நான் பார்த்ததேயில்லைக் கண்ணா! நான் சிறுவனாக இருந்த காலத்தில் பாலபாடப் புத்தகத்திலேதான் இந்தக் கதையைப் படித்தேன். “எட்டாத பழம் புளிக்கும்” என்றொரு பழமொழி இருக்கிறது. அதற்குப் பொருத்தமாக இந்தக் கதை எழுதப்பட்டிருக்கலாம்.

கண்ணன்: தாத்தா! பாட்டி சாப்பிடக் கூப்பிடுகிறார் போல இருக்கிறது. உடனே போகாவிட்டால் கோபிப்பார்,

தாத்தா: பாட்டி கோபிப்பதில் நியாயம் இருக்கிறது கண்ணா, எனக்குப் பிடித்தது, உனக்குப் பிடித்தது, உன் அம்மா, அப்பாவுக்குப் பிடித்ததென விதம் விதமாகச் சமைத்து வைத்திருப்பார் அல்லவா?

கண்ணன்: ஆமாம் தாத்தா. பாட்டி நீண்ட நேரமாகச் சமையல் அறையிலேதான் இருக்கிறா. நல்ல ருசியாகச் சமைத்து எங்களுக்குத் தருகிறா. அது சரி, நீங்கள் ஏன் தாத்தா தாவர உணவு மட்டுமே சாப்பிடுகிறீர்கள்?

தாத்தா: எங்கள் சைவசமயத்தில் மற்றைய உயிர்களைக் கொன்று தின்பது பாவம் என்று சொல்லப்பட்டிருக்கிறது கண்ணா.

கண்ணன்: அப்படியா? அப்போ, நீங்கள் இதை ஏன் இவ்வளவு நாளும் எனக்குச் சொல்லவில்லை?

தாத்தா: நீயும் இதைப்பற்றிக் கேட்கவில்லையே கண்ணா! அதோடு நீ சின்னப் பையன்தானே. நீ விரும்பிச் சாப்பிடுகிறாய். பள்ளிக்கூடத்திலும் வெளி இடங்களிலும் சாப்பிடும்போது வசதியாக இருக்கும். அதனால் கொஞ்சம் பெரியவனாக வளர்ந்தபின் சொல்லலாம் என்று நினைத்தேன்.

கண்ணன்: நீங்கள் சொல்வதும் சரிதான். எனக்கு எது நல்லது என்று உங்களுக்குத்தானே தெரியும் தாத்தா. ஆனால் ஒரு சந்தேகம். எனக்குத் தெரிந்த வளர்ந்தவர்கள் பலர் மாமிசம் சாப்பிடுகிறார்களே! ஏன் தாத்தா?

தாத்தா: வாய்க்குச் சுவையாக இருப்பதால் அவர்கள் சாப்பிடுகிறார்கள். ஆனால். சமயத்தை நன்கு அறிந்தவர்கள் சாப்பிடுவதைத் தவிர்ப்பார்கள். கடவுள் எங்கள் உடம்பை மரக்கறி, பழங்கள், தானியங்கள் சாப்பிடப் பொருத்தமாகத்தான் படைத்திருக்கிறார். புலி, சிங்கம் போன்ற மிருகங்களைத்தான் மற்றைய மிருகங்களை வேட்டையாடிக் கொன்று தின்னப் படைத்திருக்கிறார். அதனாலேதான் அவைக்கு வலிமையான உடலும் கூர்மையான பற்களும் உள்ளன.

கண்ணன்: ஆமாம் தாத்தா, காட்டு விலங்குகள் (Wild animals) என்ற டிவி நிகழ்ச்சியில் சிங்கம் புலி போன்ற விலங்குகள் எப்படி எருமை, மான் போன்ற மிருகங்களைத் துரத்திப் பிடித்துக் கொன்று சாப்பிடுகின்றன என்பதை நான்

பார்த்திருக்கிறேன்; கவலைப்பட்டிருக்கிறேன்.

தாத்தா: சிங்கம், புலி பசித்தாலும் வேறு எதையம் சாப்பிடா கண்ணா! ஆனால் மனிதர்களுக்கு சாப்பிடவென வேறு எவ்வளவோ உணவுப்பொருள்கள் இருக்கின்றன கண்ணா. மாமிசம் சாப்பிடுவது நம் உடம்புக்கு நல்லதன்று. உடம்பில் தேவைக்கு அதிகமான கொழுப்புச் சேரும். அதனால் நோய் வரும். திருக்குறளில் "புலால் மறுத்தல்" என்று ஓர் அதிகாரமே உள்ளது கண்ணா! அந்தப் பத்துக் குறள்களிலும் மாமிசம் ஏன் சாப்பிடக்கூடாது என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

கண்ணன்: அப்போ, அதை எனக்குச் சொல்லித்தாருங்கள் தாத்தா!

தாத்தா: அதில் முதலாவது குறளையும் கடைசிக் குறளையும் இன்றைக்குச் சொல்லித்தருகிறேன் கண்ணா!

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்"

(கண்ணன் தெளிவாகச் சொல்லும்வரையும் தாத்தா பொறுமையாக, மெதுவாகச் சொல்லிக்கொடுக்கிறார். கண்ணனும் சரியாகவே சொல்கிறான்.)

கண்ணன்: இப்போ இந்தக் குறளின் கருத்தைச் சொல்லுங்கோ தாத்தா!

தாத்தா: "ஒருவர் தன் உடம்பை வளர்ப்பதற்காக மற்றைய பிராணிகளைக் கொலைசெய்து அவற்றின் உடம்பைச் சாப்பிடுபவர் எப்படி அருளுடையவராக (கருணை உள்ளவராக) இருக்கமுடியும்?" என்று திருவள்ளுவர் எங்களை ஒரு கேள்வி கேட்கிறார்.

கண்ணன்: ஆமாம் தாத்தா, ஒரு பிராணியைக் கொல்லும்போது அது துடிதுடித்து அழும்தானே தாத்தா! பாவம்தான், கொல்லக்கூடாது.

தாத்தா: அதனால்தான் சைவசமயம் அதைச் செய்யக்கூடாது என்று சொல்கிறது.

கண்ணன்: அருள் என்ற சொல் இந்தக் குறளில் வருகிறதே தாத்தா! கடவுள்தான் அருளுடையவர் என்பர். இங்கே மனிதருக்குச் சொல்லப்படுகிறதே! அப்படிச் சொல்வதில்லையே!

தாத்தா: அன்பு என்று சொல்வது எங்கள் உறவினர்கள், நண்பர்களிடம் கொண்டிருப்பது. அருள் என்று சொல்வது, உலகத்தில் உள்ள எல்லா உயிர்களிடத்தும் (மனிதர்கள், பூச்சி, புழு, பறவைகள், விலங்குகள்) அன்பாக, இரக்கமாக அவற்றுக்குத் துன்பம் செய்யாமல் இருப்பது.

கண்ணன்: அது கஷ்டமான விஷயமே தாத்தா! பாம்பு, அல்லது வேறு கொடிய மிருகம் எங்களைக் கடிக்கவோ, தாக்கவோ, வந்தால் என்ன செய்வது?

தாத்தா: நீ சொல்வது சரிதான் கண்ணா! எங்களுக்கு ஆபத்து என்று வந்தால் அவற்றைத் துரத்தலாம். அல்லது நாம் விலகிச் செல்லலாம். இனி அந்த அதிகாரத்தில் வரும் கடைசிக் குறளைச் சொல்கிறேன். நீயும் சேர்ந்து சொல் பார்க்கலாம்.

“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்”

கண்ணன்: சொல்வதற்கும் இந்தக் குறள் இலகுவாக இருக்கிறது. நான் சரியாகச் சொல்கிறேனா தாத்தா?

தாத்தா: சரியாக, நன்றாக உச்சரித்தே சொன்னாய் கண்ணா! கருத்து விளங்கக் கூடியதாய் இருக்கிறதா?

கண்ணன்: “கைகூப்பி எல்லோரும் வணங்குவார்கள்” என்பது விளங்கிவிட்டது. மிச்சத்தை நீங்கள் சொல்லுங்கோ தாத்தா!.

தாத்தா: ஓர் உயிரையும் கொல்லாதவனையும் மாமிசம் உண்ணாது வாழ்பவனையும் உலகில் எல்லா உயிர்களும் கைகுவித்து வணங்கும் என்று வள்ளுவர் சொல்கிறார். சிலர் சாப்பிடுவதற்காகக் கொல்லலாம், வேறு சிலர் தாம் கொல்வதில்லை; ஆனால் மற்றவர் கொன்றதைக் கடையில் வாங்கிச் சாப்பிடலாம் அல்லவா?

கண்ணன்: ஆமாம் தாத்தா! யாரோ சாப்பிடுவதனால்தானே கொலை செய்து கொண்டுவந்து விற்கிறார்கள்.

தாத்தா: கெட்டிக்காரன்! ஒருவரும் வாங்காவிட்டால் அந்த உயிர்களைக் கொல்லவேண்டி யிருக்காது.
(கண்ணனும் தாத்தாவும் பாட்டி அன்புடன் சுவையாகப் பரிமாறிய உணவை இரசித்துச் சாப்பிட்னர்)

பாட்டி: கண்ணா! சாப்பாடு எப்படி? சுவையாக இருக்கிறதா?

கண்ணன்: அருமையாக இருந்தது பாட்டி! தாத்தாவும் நானும் இரசித்துச் சாப்பிடுவதை நீங்கள்தான் பக்கத்திலேயே இருந்து பார்த்தீர்களே! பின் இது என்ன கேள்வி? என் தட்டைப் பாருங்கள். எல்லாமே வழித்துச் சாப்பிட்டுவிட்டேன்.

தாத்தா: பாட்டிக்கு எல்லாம் தெரியும் கண்ணா! நீ என்ன சொல்கிறாய் என்று பார்ப்பதற்குச் சும்மா சீண்டுகிறா.

(கண்ணனும் தாத்தாவும் உணவு முடிந்து கைகழுவித் துடைக்கும்போது கண்ணனின் மடிக்கணினி (Laptop) ஒலிக்கிறது. யாரோ ஸ்கைப்பில் (Skype) அழைக்கிறார்கள் என்று தெரிகிறது. கண்ணன் கணினியைத் திறக்கிறான். ஸ்ரீராமும் அவன் தாத்தாவும் வருகிறார்கள். அவர்களைக் கண்டதும் கண்ணனுக்கும் தாத்தாவுக்கும் மிகுந்த மகிழ்ச்சி)

கண்ணன்: ஹலோ ஸ்ரீராம்!

ஸ்ரீராம்: வணக்கம் கண்ணா!

கண்ணன்: Oh! You have stared to speak Tamil. I am very happy.

ஸ்ரீராம்: ஆம் என் தாத்தா என்னுடன் தமிழிலேதான் பேசுகிறார். I am trying to speak as well.

சிவகுமார்: ஆமாம் கண்ணா! நான் ஸ்ரீராமுடன் தமிழிலே பேச ஆரம்பித்ததால் வீட்டில் மற்ற எல்லோருமே தமிழ் பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

தாத்தா: அது நல்ல முயற்சி, பாராட்டுக்கள். நான் அனுப்பிய கலசம் கிடைத்ததா?

சிவகுமார்: அதற்கு நன்றி சொல்லுவோம் என்றுதான் உங்களை அழைத்தோம். அதில் தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரைகள் கருத்துக்கள் இருப்பதால் வீட்டில் எல்லோரும் படிக்கிறார்கள். தமிழில் இருப்பதை நான் ஆங்கிலத்தில் அவர்களுக்கு விளக்குவேன்.

தாத்தா: அப்போ, உங்கள் வீட்டில் இப்போது தமிழ், சைவசமய வகுப்புக்கள் நடை பெறுவது போல இருக்கிறதே!

ஸ்ரீராம்: ஆமாம் தாத்தா, சனி, ஞாயிறு நாள்களிலும் சிலவேளை வாரத்தில் மாலை நேரம் சாப்பிடும்போதும் நடக்கிறது.

தாத்தா: ஓ! அபாரம்! முயன்றால் எதுவும் நடக்கும்.

சிவகுமார்: எல்லாம் உங்களைச் சந்தித்த பலன்தான்.

தாத்தா: எல்லாம் இறைவன் செயல். எது எப்போது நடக்கவேண்டுமோ, அது அப்போது நடக்கும் சிவகுமார்!

கண்ணன்: ஸ்ரீராம்! நீ முதலில் தமிழ் பேசப்பழகு. பிறகு உனக்குத் தமிழ் படிக்கவேண்டும் என்ற ஆவல் வரும்.

ஸ்ரீராம்: ஆமாம் கண்ணா! நாங்கள் இருவரும் இனித் தமிழிலேயே பேசுவோம்.

தாத்தா: சிவகுமார்! நாங்கள் தமிழிலே பேசாவிட்டால் எங்களைத் தமிழர் என்று சொல்வதிலே அர்த்தம் இல்லை. அல்லவா?

சிவகுமார்: உண்மை, முற்றிலும் உண்மை

தாத்தா: இலகுவிற் சொல்லக்கூடிய தேவாரம், திருக்குறள், ஆத்திசூடி போன்றவற்றை

முதலில் சொல்லிக் கொடுங்கள். தொடங்கும்போது பிள்ளைகளுக்கு ஆர்வம் வருவதுபோலச் சொல்லிக்கொடுக்கவேண்டும்.

சிவகுமார்: அடிக்கடி உங்களுடன் பேசுவோம். இப்போது வெளியிலே போக இருக்கிறோம். அடுத்த வாரம் மீண்டும் அழைத்துப் பேசுவோம்.

ஸ்ரீராம்: அடுத்த வாரம் பேசுவோம் கண்ணா! தாத்தா வணக்கம்.

தாத்தா, கண்ணன் இருவரும்: பேசியது மகிழ்ச்சி. மீண்டும் சந்திக்கும்வரை வணக்கம்.

---

39ஆம் பக்கத் தொடர்ச்சி

கண்ணன் மணக்கோலத்தில் வருகிறான். முறைப்படி திருமணம் செய்து கைப்பிடிக்கிறான். திருமணத்துக்கு வரும்போது ஆயிரம் யானைகள் சூழ்ந்து வருகின்றன. அவரை வரவேற்க வீதிகள் தோறும் தோரணங்கள் கட்டப்பெற்றுள்ளன. வீடுகளிலெல்லாம் பூரண கும்பங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. விளக்குகள் ஏற்றப்பட்டிருக்கின்றன. மக்கள் அனைவரும் திரண்டுவந்து நாராயணனை வரவேற்கிறார்கள் தோழிகளே! நாளைக்குத் திருமணம் என்று நிச்சயிக்கப்பட்டுள்ளது. பாளையுடன் கூடிய பாக்கு மரங்கள் (கமுகு) வாழைக்குலையுடன் கூடிய வாழைகள் நாட்டப்பட்ட பந்தல்கள் தெருக்கள்தோறும் கட்டப்பட்டுள்ளன. அவற்றைப் பூக்களால் அலங்கரித்துள்ளார்கள். அப்படியான பந்தல்களின் ஊடு கோவிந்தன், மாதவன், என்னும் பல நாமங்களைக்கொண்ட திருமால் நுழைவதை நான் கண்டேன் தோழிகளே!

இந்திரன் முதலான தேவர்கள் எல்லோரும் வந்து திருமாலுக்கு மணமுடித்துவைக்க என்னைக் கேட்கின்றனர். அவர்கள் மந்திரம் ஓத, எனக்கு கூறைப்பட்டுடுத்தி மணமாலையை சுந்தரி (துர்க்கை) சூட்டக்கண்டேன் தோழிகளே

நாற்திசையிலிருந்தும் வந்த வேதியர்கள் எனக்கு புனித நீரைக் கொண்டுவந்து மங்கல நீராட்டு கிறார்கள். திருமஞ்சனம் செய்கிறார்கள். கருநீல மலர்போன்ற கண்களையுடைய திருமாலுக்கு என்னை மணமகளாக்கக் காப்புக்கட்டுகின்றனர் தோழிகளே!

ஒளிபொருந்திய தீபங்கள், பூரண கும்பங்களை ஏந்திய அழகிய பெண்கள் வரிசையாக நின்று வரவேற்க மதுரைக்கரசனான மாதவன் வாழ்த்தொலிகள் நடுவே மணப்பந்தலில் நுழைகின்றான் தோழிகளே!

மத்தள வாத்தியங்கள் முழங்குகின்றன. சங்குகள் ஊதப்படுகின்றன. முத்துமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் என் மைத்துனனாகிய நம்பி மதுசூதனன் என் கைத்தலம் பற்றினான் தோழிகளே!

மந்திரங்களைக் கற்றுணர்ந்தவர்கள் வேதங்களிலுள்ள சுலோகங்களை ஓதி மலர்கள் தூவி ஆசீரவதிக்க, மதம் பொருந்திய ஆண்யானை போன்ற கம்பீரமான தோற்றமுள்ள கண்ணபிரான் என் கையைப் பற்றி அக்கினியை வலம்வந்தார் தோழிகளே!

இந்தப் பிறவிக்கும் தொடரந்து வரும் ஏழேழு பிறவிகளுக்கும் என்னைத் தன் உடைமையாக்கிக்

கொண்டவன் தன் சிவந்த திருக்கையால் எனது காலை எடுத்து அம்மி மிதிக்கக் கண்டேன் தோழிகளே!

கூரிய அம்புபோன்ற கண்களையும் ஒளிபொருந்திய முகத்தையுமுடைய தாய்மார்கள் எல்லோரும் வந்திருந்து என்னை அக்கினிமுன்னே நிறகவைத்து அந்த அக்கினி சாட்சியாக அரிமுகள் அச்சுதன் என்னும் திருநாமங்களையுடைய கண்ணபிரான் கைமேல் என்கையை வைத்து அரிசிப்பொரி தூவி என்னை ஆசீர்வதித்தார்கள்.

குங்குமம் வைத்து, சந்தனம் கலந்த மணநீரை வீதிவலமாகக் கொண்டுவந்து என்னைக் கண்ணனோடு அழைத்துச்சென்று திருமஞ்சனம் ஆட்டுகின்றனர். இப்படித் தனக்கு ஒரு திருமணம் நடந்ததாகவே கனவில் கண்டதைத் தன் தோழியருக்கு எடுத்துக் கூறி மகிழ்கிறாள் அந்தக் கோதை நாச்சியார்.

பண்டுதொட்டே தமிழர் பண்பாட்டில், திருமணச் சடங்குகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாள் கனவிலே கண்டதாகச் சொல்லப்பட்டிருக்கின்ற சடங்குமுறைகள் இன்றும் மாறுபடாது இருப்பது ஆச்சரியத்துக்குரியது. பெண்கள் தங்கள் இன்பதுன்பங்களை தம் தோழியருடன் பகிர்ந்து மகிழ்வதும் இயல்பானது என்பதையும் இங்கு காணமுடிகிறது. நாங்களும் அந்தக் கனவுக்காட்சியை மனக்கண்ணால் கண்டு மகிழும்வகையில் இந்தப் பாடல்கள் அமைந்துள்ளன.

தன் வாழ்நாள் முழுவதும் இறைவனின் பெருமைகளைப் பாடி அவனை அடையத் துடித்து ஈற்றில் திருவரங்கத்தம்மானுடன் ஐக்கியமாகிவிடுகிறாள் ஆண்டாள். இறைவனை அடையவேண்டுமென்றால் எவ்வளவு தூரம் தவிக்கவேண்டும், பத்திபரவசமாக வணங்கவேண்டும் என்பதை இந்த நாச்சியார் திருமொழிப் பாடல்கள் மூலமாக நாம் அறியமுடிகிறது.

## இன்சொல்


மானுடராய்ப் பிறந்த நாம் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றினாலும் அறம் புரியவேண்டும். மனத்தாற் செய்யும் அறம் கடவுள் நினைவும் நற்சிந்தனையுமாம். மொழியாற் புரியும் அறம், ஆண்டவன் திருநாமத்தையும் புகழையும் ஓதுதலும், பிறருக்குத் துன்பம் பயவாத மொழிகளைக் கூறுதலுமாம். உடலாற் புரியும் அறம், பதியை மலர்கொண்டு பரவுதலும், அடியார்க்குத் தொண்டுபுரிதலும், பிற உயிர்களுக்கு நன்மை செய்தலுமாம்.

அன்பும் அருளும் நிறைந்த உரைகள் பிறருக்கு இன்பத்தைக் கொடுக்கும். பகைவர்களும் இன்சொலால் நம் நண்பர்கள் ஆவர். அத்தகைய இன்சொல்லைக் கூறுபவர்க்கு இயமன் தூதரும் அஞ்சுவரென்று ஞானசம்பந்தர் கூறுகின்றனர்.

இன்சொலே பேசுகின்றவர்களுக்கு உலகில் ஒருவகையான துன்பமும் இல்லை; இயம வாதனையும் கிடையாது; சிவகதி திண்ணமாகக் கிடைக்கும்.கனிகள் நிறைந்துள்ள ஒரு மரத்தில்வகையறியா ஒருவன் சுவைமிகுந்த கனிகளை விலக்கி கைப்புடைய காய்களை மென்றதை ஒக்கும், இன்னாத சொற்களைக் கூறுவோன் இயல்பு.

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று**

**நன்றி: வாரியார் விரிவுரை விருந்து**



# Thirukural stories
# திருக்குறட் கதைகள்

திருமதி சாவித்திரி ஆனந்தன்
Mrs Savithiri Anandan

## நட்பு - **Friendship**

அதிகாரம் - 79 குறள் - 782 Chapter – 79 Kural – 782

**செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்**
**வினைக்கரிய யாவுள காப்பு**

True friendship is rare and hard to gain. Once achieved, that safeguards against unpredictable woes. Genuine friendship of noble souls refines as it grows and sustains. The grace of natural friendship is mental happiness canalised smoothly, safeguarding from harm, partaking in grief and forthcoming to relieve pain.

When we go through the great epic Ramayana, there is an outstanding example of such friendship. Guhan was Rama's friend, dear to him as his own life. He was the chieftain of the tribes of Nishadas and a man of great prestige and power.

When Guhan heard about Rama's banishment from Ayothi [to leave his own country and to live in forest for 14years] by his stepmother, he would repeatedly remind his fellow workers to make arrangements to receive Rama.

The day came, when Rama with Seetha and Lakshmana arrived Guhan's place in order to cross the river to enter the forest. Guhan asked and begged Rama to stay with him. "Welcome to you Oh! Almighty! All this land is yours. We are your servants. Rule over this Kingdom". But Rama refused saying " We stand honoured by you and your show of affection. But, I have to obey my father Dhasaratha's words, in addition to mother Kaikeyi's word".

Guhan arranged his boat for them to cross the river. Before they would get into the boat, Guhan said," Oh! Rama! I heard the story of the stone turning to a woman (Ahalya) when your feet touched it. Now, that you are getting into my boat, I don't want my boat to turn into a woman when you get into my boat. So, please let me wash your feet before you get in". The actual intention behind these word was, Guhan wanted to touch Sri Rama's feet and worship him heartfully. But Sri Rama said that a friend like Guhan has a place in his heart and not at his feet and hugged Guhan affectionately.. On seeing the devotion and affection of their friendship, Sitha and Lakshmana got tears in their eyes..

When they were about to depart, Guhan said that he would leave his body the very next second after 14years, if he failed to have Rama's Dharsan. Sri Rama granted his wish with a smile. As Guhan stared, three of them moved into the dark forests. To get a view of his beloved friend his eyes pierced the darkness of the forest.

நட்பைப்போல, செய்து கொள்வதற்கு அரிதான பொருள்கள் யாது உள்ளன? அத்தகைய நட்பு கிடைக்குமெனில். அதுபோல. பகைவர் செய்யும் செயலுக்குப் பெறற்கரிய காவலாக இருப்பவை எவை? உண்மையான நட்பு என்பது, இருவருக்கிடையில் ஏற்படக்கூடிய ஆழமான புரிந்துணர்தலின் ஓர் வெளிப்பாடு. அத்தகைய நட்பு, அது வளர்கின்றபோதே பண்பட்டு, வாழ்க்கைக்கான ஒரு காப்பாகவும் அமையும். அது மனங்களின் மகிழ்ச்சி. மெதுவாக - ஆழமாக - வேரோடி தீமை களிலிருந்து ஒருவரையொருவர் பாதுகாத்து, துன்பங்களில் பங்கு கொண்டு, வரப்போகும் துன்பங்களிலிருந்தும் பாதுகாக்கக்கூடிய ஒரு அற்புதம்.

இராமாயணம் என்ற மகாகாவியத்தில் சிறீ ராமனுக்கும் வேடுவர் தலைவனான குகனுக்குமிடையில் தோன்றிய நட்பு ஒரு மிகச் சிறந்த உதாரணமாகும். வேடுவர் தலைவனாக, பெருமைக்குரியவனாக விளங்கிய குகன் சிறீ ராமனைத் தன் உயிராக நேசித்தான்.

சிறியதாயாரினால் ராமருக்கு விதிக்கப்பட்ட பதினான்கு வருட வனவாசம் பற்றி அறியநேர்ந்து மனக்கலக்கமுற்ற குகன், ராமரை எதிர்கொள்வதற்கான சகல ஏற்பாடுகளையும் தனது பணியாட்கள்மூலம் செய்துகொண்டிருந்தான். அந்த நாளும் வந்தது. ஒரு ஆற்றைக் கடந்து காட்டுக்குள் செல்வதற்காக ராமர், சீதாபிராட்டியார், லக்குமணன் ஆகிய மூவரும் குகனுடைய இடத்தை வந்தடைந்தார்கள். “சிறீராமா! உன்னை அன்புடன் வரவேற்கிறோம். நாங்கள் வாழுகின்ற இந்தப் பூமி உன்னுடையது. நாங்கள் உனது பணியாட்கள். நீ இங்கேயே எம்முடன் தங்கியிருந்து இந்த ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொள்வாயாக” என்று குகன் ராமரிடம் பணிவோடு கேட்டுக்கொண்டான். ஆனால், உண்மை, நேர்மை என்பவற்றின் வடிவமான ராமபிரான் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. “நண்பனே! உன்னாலும் உன் அன்பினாலும் நாம் மதிக்கப்படுகிறோம். எனினும் எனது பிதா தசரதருடையதும், எனது அன்னை கைகேயினுடையதும் வார்த்தைகளுக்கு மதிப்பளித்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது எனது கடமை” என்று குகனிடம் சொன்னார்.

எனவே, அவர்கள் ஆற்றைக் கடப்பதற்காகத் தனது படகைக் குகன் ஏற்பாடு செய்தான். ராமபிரான் படகினுள் காலடி வைப்பதற்கு முன், குகன் அவரைப் பார்த்து பின்வருமாறு கூறினான்- “ஓ! சிறி ராமனே! உன் பாதம்பட்டபோது அகலிகை என்ற பெண்ணாக மாறிய கல்லின் கதையை நான் கேள்வியுற்றிருக்கிறேன். இப்பொழுது எனது படகினுள் நீ கால்பதிக்கப் போகிறாய். உனது பாதங்கள் பட்டு என்து எனது படகும் ஒரு பெண்ணாக மாறிவிடுமோ என்று அஞ்சுகிறேன் ஆதலால், முதலில் உனது பாதங்களை நான் கழுவிவிடுகிறேன்.” - அவனுடைய இந்த வார்த்தைகளில் மறைந்து கிடந்த உண்மையான நோக்கம், ராமருடைய கால்களைக் கழுவுதல் மூலம் அவரது பாதங்களைத் தொட்டு வணங்கிடமுடியும் என்ற பெருவிருப்பமே.

'குகா! ஏன் அருமை நண்பனே! உன்னைப் போன்ற ஒரு நண்பனுக்குரிய இடம் எனது இதயம் மட்டும்தான். கால்களல்ல” என்று பதிலுக்கு கூறிய ராமர் தன் நண்பனை இறுகத் தழுவி அணைத்துக்கொண்டார். இந்த ஆழமான நட்பையும், அர்ப்பணிப்பையும் தரிசித்த சீதாபிராட்டியினதும் இலக்குமணனினதும் கண்களில் நீர்த்துளிகள் அரும்பின.

அவர்கள் அவ்விடம் விட்டு நீங்கி ஆற்றைக் கடந்து காட்டுக்குள் பிரவேசிக்க ஆயத்தமானபோது - அந்தப் பிரிவைத் தாங்க முடியாத குகன் - ராமரைப் பார்த்து, “பதினான்கு ஆண்டுகள் முடிவுற்ற அடுத்த விநாடியில், நான் உங்களைத் தரிசிக்க முடியாது போனால், எனது உயிர் உடலைவிட்டு நீங்கிவிடும்” என்று கூறினான். “உனது விருப்பம் நிறைவேறும்படி, நான் உன்னிடம் வருவேன்” என்று கூறுவதுபோல ராமபிரான் தனது நண்பனுடைய வேண்டுதலைத் தனது புன்னகை மூலம் அங்கீகரித்தார். குகன் பார்த்தபடியே நிற்க, ராமர், சீதாபிராட்டியார், லக்குமணன் ஆகிய மூவரும் அந்த இருண்ட ஆரணயத்துக்குள் நடந்தார்கள். தன்னுடைய ஆருயிர் நண்பனைக் காண்பதற்காக குகனுடைய பார்வை, காட்டின் அடர்ந்த இருளை ஊடறுத்துக்கொண்டு அவர்கள் சென்ற திசையில் பயணம் செய்தது.



லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை





இலண்டனில் Setline Data அச்சகத்தால் (தொலைபேசி: 0207 232 0446) அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14-01-2017 அன்று வெளியிடப்படுகிறது.